பிக்கிப் புறா

—அனிதாகுமார்

1

மேரி ஆட்ஸ் கல்லூரி மிகவும் பரபரப்பாக இருந்தது. அந்த பரபரப்பிலும் ஆசிரியர், ஆசிரியை, மாணவ - மாணவிகள் எல்லோருடைய மனதிலும் உற்சாகம் கரை புரண்டு ஓடிக் கொண்டிருந்தது.

மாவட்ட கலெக்டர் வருகை தரப் போகிறார். அந்த கலெக்டர் ஒரு பெண்மணி. அதே கல்லூரியில் படித்த மாணவி என்பதுதான் முக்கிய அம்சம். சாலையின் வழி நெடுக பேனர்கள் எழுப்பப்பட்டு, கலர்புல்லான போஸ்டர்கள் ஒட்டப்படிருந்தன. கலெக்டரை வரவேற்பதற்காக, டிரம்ஸ் ஆடிட்டோரியம் ரம்மியமாக அலங்கரிக் கப்பட்டிருந்தது. வயது முதிர்ந்த ஆசிரியை ஒருவர் மாணவ – மாணவிகளிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"நம்ம கல்லூரியில் படித்த மாணவி இப்போது கலெக்டராகி இருக்கிறாள். இதில் கவனிக்கப்படவேண்டிய முக்கியமான அம்சம் என்ன தெரியுமா? அவங்க சுமாராக படித்த மாணவிதான். மதிப்பெண்கள் எல்லாம் பாடரில்தான் இருக்கும். கடல் மடைபோல் ஆங்கிலத்தில் பேச தெரியாது. அப்படிப்பட்ட மாணவி கலெக்டராகி இருக்கிறாள் என்பது எவ்வளவு பெருமையாயிருக்கிறது!"

ஆசிரியை சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த மாணவ - மாணவிகளின் உடல் சிலிர்த்தது. சுமாராக படித்த மாணவி எப்படி திறமையான கலெக்டரானாள் என்பதை அறிந்து கொள்ள பெண் கலெக்டரின் வருகைக்காக அனைவரும் ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். 'Easter west our collector is best'.

'டாக்டர் இன்ஜீனியர் சேவையைவிட கலெக்டரின் சேவைதான் உயர்ந்தது' 'எங்கள் கல்லூரிக்கு பெருமை தேடி தந்த பெண் சிங்கமே வருக, வருக..., இதுபோன்று, சாலை முழுவதிலும் தன்னை பாராட்டி ஒட்டப்பட்டிருந்த போஸ்டர்களை கண்கள் அகல பார்த்து வியந்தபடி அம்பாஸிடர் காரில் வந்து கொண்டிருந்தாள் அனிஷா. அவளின் பாதுகாப்பிற்காக செக்யூரிட்டி கார்டுகள் மற்றொரு காரில் பின்னாடி வந்து கொண்டிருந்தார்கள். கல்லூரியை நெருங்குவதற்கு முன்பே டிரைவரிடம் "வண்டியை கொஞ்சம் நிறுத்துங்க" என்றாள் அனிஷா மென்மையான குரலில்.

"கல்லூரிக்குள் கொண்டு போய் விட்டு விடுகிறேன் மேடம்!" என்றான் டிரைவர் பணிவாக. "வேண்டாம் பொன்னய்யா. நான் படிச்ச கல்லூரி இது. சாலையில் இறங்கி நடந்து போகணும்னு ஆசையாயிருக்கிறது!" என்றாள். டிரைவர் காரை நிறுத்தினான். அனிஷா காரை விட்டு இறங்கினாள். ஐந்து, ஏழு உயரம். தங்க ரேக்குப் போன்ற நிறம். கோல்டன் நிற பிரேம் கண்ணாடியை ஆள்காட்டி விரலால் உயர்த்தி விட்டாள். தலை கேசத்தை கோதிவிட்டபடி சாலையில் இறங்கி கர்வமான பார்வையுடன் நடக்க ஆரம்பித்தாள். வாளிப்பான உடற்கட்டில் சுற்றியிருந்த செல்.ப் டிசைன் சிவப்பு நிற பட்டுப்புடவை காற்றில் படபடக்க புன்னகையுடன் கல்லூரிக்குள் நுழைந்தாள். குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னாடியே அனிஷா வந்துவிட்டதால் அனைவரும் அதிர்ச்சி கலந்த சந்தோஷத்தில் திக்கு முக்காடிப் போனார்கள்.

ஆடிட்டோரியத்திற்குள் செல்லாமல் முதல் மாடி, இரண்டாவது மாடியில் நிரம்பி வழிந்த மாணவ - மாணவிகள் அவளைப் பார்த்து பலத்த கரகோஷங்களை எழுப்பினார்கள். உற்சாகத்துடனும் குதூகலத்துடனும் அனிஷா அவர்களைப் பார்த்து கையசைத்தாள். துணை பிரின்சிபால் எல்லா மாணவ – மாணவிகளையும் அமைதியாக ஆடிட்டோரியத்துக்கு செல்லுமாறு மைக்கில் உத்தரவிட்டார். அனைவரும் கீழ்படிந்தார்கள்.

கல்லூரி முதல்வர் ஆரோக்கிய மேரி புன்னகையுடன் அனிஷாவை வரவேற்றார். "வாங்க மேடம்! நீங்க இந்த கல்லூரியில் படித்த மாணவிங்கறதால கூடுதல் வரவேற்பு, கூடுதல் எதிர்பார்ப்பு. உங்களோட ஸ்பீச்சை கேட்பதற்காக எல்லோரும் ஆவலா காத்துக் கிட்டிருக்காங்க. பவ்யமாக அவளை ஆடிட்டோரியத்துக்கு அழைத்துச் சென்றாள்.

அனிஷா உதடுகளில் தவழும் மென் சிரிப்புடன் ஆரோக்கிய மேரியைப் பின் தொடர்ந்தாள். ஆடிட்டோரியத்திற்கு செல்லும் இருபுறமும் அசோக மரங்கள் வரிசையாக இருந்தன. அது பார்வையை ஈர்த்தது. அந்த அசோக மரத்தை பார்த்தவாறு ஒரு கணம் அப்படியே நின்று விட்டாள். கோல்டன் நிற பிரேம் கண்ணாடியை கழற்றினாள். அசோக மரத்தின் மீது எழுதியிருந்த வார்த்தையை உன்னிப்பாக கவனித்தாள். உதட்டுக்குள் அந்த வார்த்தையை படித்துப் பார்த்தாள். 'நான் இருக்கேன்...' என்று அந்த மரத்தில் செதுக்கியிருந்தது. அந்த வார்த்தையைப் பார்த்ததும், அனிஷாவின் உடம்பு முழுவதும் ஒருவித

நடுக்கம் பரவியது. நெஞ்சில் சுருக்கென்று வலி தைத்தது. வியர்த்துக் கொட்டியது. கண்களை இருட்டியது. கையில் பிடித்திருந்த கோல்டன் நிற பிரேம் கண்ணாடி கீழே விழுந்தது. கால்களை அழுத்தமாய் தரையின் ஊன்றி சமாளித்துக் கொள்ள முயன்றாள். முடியவில்லை. அறுத்த தோரணமாய் கீழே சரிந்தாள்.

ஆரோக்கிய மேரி, வைஸ் - பிரின்சிபால், கரஸ்பான்டன்ஸ், எச். ஓ. டி.கள் அனைவரும் திடுக்கிட்டுப் போனார்கள். கல்லூரி வளாகம் மிகவும் பரபரப்பானது. பின்பு நிதானித்து அனிஷாவை கல்லூரியில் இருந்த தனி அறைக்கு கொண்டு சென்றார்கள். அவசரமாக டாக்டர் வரவழைக்கப்பட்டனர். ஆரோக்கியமேரி பதற்றத்துடனும், லேசான வருத்தத்துடனும் அவளிடம் கேட்டாள்.

''மேடத்துக்கு என்னாச்சு? பயப்படும்படியா ஒண்ணுமில்லையே?''

''பயப்படறதுக்கு ஒண்ணுமில்லை. ம்... எதனால மயக்கமானாங்க?''

"ஆடிட்டோரியத்திற்கு போகும் வழியில் இருந்த அசோக மரத்தில் செதுக்கி இருந்த 'நான் இருக்கிறேன்' என்ற வார்த்தையை பார்த்ததும் மயக்கமாயிட்டாங்க!'' டாக்டர் யோசனையாய் தாடையை நெருடினார்.

"சாதாரணமான ஒரு வார்த்தை அவங்க மயக்கமாகும் அளவிற்கு மனதை பாதித்திருக்கிறது என்றால் அந்த வார்த்தைகளுக்கும் மேடத்தோட வாழ்க்கைக்கும் நெருங்கின சம்பந்தம் இருக்கிறது என நினைக்கிறேன்.

இன்ஜெக்ஷன் போட்டிருக்கேன். கொஞ்ச நேரத்துல கண் முழிச்சிடுவாங்க!'' என்று சொல்லிவிட்டு டாக்டர் புறப்பட்டுவிட்டார். ஆரோக்கியமேரி அனிஷாவின் அருகே வந்தாள். கம்பீரமாக கல்லூரிக்குள் வந்தவள் இப்போது துவண்டு போன நிலையில் கட்டிலில் படித்திருப்பதை பார்ப்பதற்கு வேதனையாக இருந்தது.

அனிஷாவின் உடம்பில் லேசான அசைவு உண்டாவது தெரிந்தது. அனிஷாவின் உதடுகள் முணுமுணுத்தன. ஆரோக்கியமேரி குனிந்து அவள் என்ன சொல்கிறாள் என்பதை காது கொடுத்துக் கேட்டாள்.

'அ... அகஸ்டின், அ... அகஸ்டின்' அனிஷா அரை மயக்கத்தில் குழறலாய் உச்சரித்தாள். ஆரோக்கியமேரி புருவத்தைச் சுருக்கி அவளையே பார்த்தாள். அருகில் நின்று கொண்டிருந்த வைஸ் பிரின்சிபாலிடம் தலையைத் திருப்பிக் கேட்டார்.

"அகஸ்டின் பெயர் சொல்றாங்க.. யார் அந்த அகஸ்டின்?" அவளை சுற்றியிருந்தவர்கள் புரியாமல் கிசுகிசுத்துக் கொண்டிருந்தார்கள்.

கடந்த கால ஏடுகள் அனிஷாவின் மனதில் புரள, அதில் பதிந்து போன அகஸ்டினின் சித்திரப் பக்கம் மனதில் பசையை ஒட்டி விசுவருபம் எடுத்தது. நிலத்தடி நீர் தோண்டியவுடன் குபீரென்று பாய்வது போல் ஏழு வருடங்களாய் மனதில் புதைந்து போய்விட்ட எண்ணங்கள் பீறிட்டு வரத் தொடங்கியது. இதற்குமேல் கட்டுப்படுத்த முடியாமல் எண்ணங்களில் மூழ்கினாள் அனிஷா.

2

பல வருடங்களுக்கு முன் இருக்கும் அனிஷா இந்த கல்லூரியில் கால் வைத்திருந்த நேரம். கெமிஸ்ட்ரி வகுப்பு நடந்து கொண்டிருந்தது. புரபசர் மும்முரமாக வகுப்பு எடுத்துக் கொண்டிருந்தார். பச்சை நிறத்தில் சுடிதார் அணிந்திருந்த அனிஷா சக மாணவர்களுடன் அமர்ந்திருந்தாள். புரபசரையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். மனசெல்லாம் வீட்டில் இருந்து கிளம்பும்போது டிவியில் பார்த்த குஷ்புவின் நினைவாகவே இருந்தது. அவள் அணிந்திருந்த நவநாகரிக உடையைத்தான் அவள் மனதில் கற்பனை ஓடிக் கொண்டிருந்தது.

திடீரென புரபசர் "அனிஷா நீ சொல்லு!" என்றார். புரபசரின் குரல் கேட்டவுடன் கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த மனம் திரும்பி வந்தது. திருதிருவென விழித்தபடி எழுந்து நின்றாள்.

என்ன கேள்வி கேட்பார் என்பதை கவனிக்க வில்லை. "சுலபமான கேள்வி பதில் சொல்வதற்கு இவ்வளவு நேரமா?" எனக் கேட்டார். சரியான விடையை சொல்லிவிட்டால் வகுப்பில் அனைவருக்கும் முன்பு மானம் போய்விடுமே..! மெதுவாக தலையை திருப்பிப் பார்த்தாள். அவள் நண்பன் கணேஷ் பின்னாடி பெஞ்சில் அமர்ந்திருந்தான். 'என்ன பதில்' என்று சைகையால் கேட்டாள். அவன் உதட்டை அசைத்து முகஜாடையால் பதிலைச் சொன்னான். அவன் கூறின பதிலை புரிந்து கொண்டு பதில் சொன்னாள் அனிஷா.

"இஞ்சியும் பூண்டும் சார்!" அவள் சொன்ன பதிலை கேட்டு ஒட்டு மொத்த வகுப்பே சிரிப்பில் அதிர்ந்தது. புரபசரே சிரித்துவிட்டார். பின்பு அவருக்கு கோபம் வந்தது.

"கெட் அவுட் ஆ.ப் தி கிளாஸ்!" என்றார்.

"ச... சார்"

"ஹைட்ரஜனும், ஆக்ஸிஜனும் கலந்தால் என்ன உப்பு கரைசல் கிடைக்கும்னு கேட்டேன். அதற்கு இஞ்சியும் பூண்டும் என்று பொறுப்பில்லாமல் பதில் சொல்லியிருக்கே. என் வகுப்பிற்கு நீ தரும் மரியாதை இதுதானா?

கெட் அவுட் ஆ.ப் தி கிளாஸ்!" என்றார் கடுமையான குரலில். தலையை குனிந்தபடி வகுப்பை விட்டு வெளியே சென்றாள் அனிஷா. அவமானமாய் போனது. உள்ளுக்குள் கணேஷை திட்டி தீர்த்தாள். வகுப்பு முடிவடைந்ததும் கணேஷ் வெளியே வந்து அவளைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தான்.

"எல்லாம் உன்னால்தான் ஏன்டா சார் கிட்டே மாட்டி விட்டே..?"

"சின்ன கேள்விக்குக்கூட பதில் தெரியலை..!"

"நானே குஷ்பூவை பற்றி நினைச்சுகிட்டிருந்தேன். அந்த நேரம் பார்த்து இந்த சொட்டத்தலை என் தலையில மண்ணை அள்ளி போட்டுடுச்சு. மனசே சரியில்லை. கேண்டீனுக்கு போயிட்டு வரலாமா கணேஷ்!"

"ம்... ஓகே!"

கணேஷும் அனிஷாவும் கல்லூரியிலிருந்த கேண்டீனுக்கு சென்றார்கள். லஞ்ச் டைமில்தான் கூட்டம் அதிகமாக இருக்கும். அன்டைம் என்பதால் அவ்வளவாக யாரும் இல்லை. ஒரு நான்கைந்து மாணவர்களைத் தவிர, கணேஷ் எக் ஆம்லட் ஆர்டர் பண்ணுவதற்காக சென்றான். அனிஷா ஒரு டேபிள் சேரில் அமர்ந்து கொண்டாள்.

"டேய் மச்சான், மூவ் வேணுமா, அயோடக்ஸ் வேணுமா, அமிர்தாஞ்சன் வேணுமா... சொல்லுடா. எவ்வளவு அக்கறையாய் கேட்கிறேன்ல..."

"எனக்கெதுக்குடா அதெல்லாம்...?" மற்றொரு மாணவன் கேட்டான்.

"ஒரு கிளாஸ் பூராவும் வெளியே நின்னுருக்கே... கால் வலிக்குதாடா..?"

அனிஷா சுரீரென்று நெருப்பு பட்ட மாதிரி நிமிர்ந்தாள். தலையை திருப்பி பார்த்தாள். சற்று தள்ளி இருந்த மேஜையில் நான்கைந்து மாணவர்கள் அவளை மறைமுகமாக கிண்டல் செய்து கொண்டிருந்தார்கள்.

கணேஷ் சூடான இரண்டு எக் ஆம்லட்டுடன் வந்தான். சூடு பொறுக்காமல் இரண்டு கைகளையும் தேய்த்துக் கொண்டான். அனிஷா எக் ஆம்லட்டை சாப்பிடாமல் இறுக்கமான முகத்துடன் அமர்ந்திருந்தாள்.

"ஹலோ, எக் ஆம்லட் ஆறி போறதுக்குள்ள சாப்பிடு..!" என்றான் கணேஷ்.

"பின்னாடி இருக்கிற பாய்ஸ் என்னை கிண்டல் பண்றாங்க. எனக்கு கஷ்டமாயிருக்கு..!" என்றாள் அனிஷா.

"என்ன கிண்டல் பண்றாங்க..?"

அனிஷா சொன்னாள்.

"அவங்கெல்லாம் சீனியர்ஸ் அப்படித்தான் நடந்துப்பாங்க. நான் போய் அவங்களை கேள்வி கேட்க முடியாது.

"ஜாலியா கிண்டல் பண்ணியிருக்காங்க. நீயும் ஜாலியா எடுத்துக்கோ.." என்றான் சர்வசாதாரணமாய். எக் ஆம்லட்டை சாப்பிட்டு விட்டு இருவரும் கேண்டீனை விட்டு வெளியே வந்தார்கள். கணேஷ் முன்னாடி சென்று விட்டான். மெதுவாக நடைபோட்டு சென்று கொண்டிருந்த அனிஷாவை "எக்ஸ்க்யூஸ்மீ" என்று ஒரு குரல் நிறுத்தியது. உயரமாய் கருப்பு மீசையும், வெள்ளைப் பல் வரிசை, ஓரச் சிரிப்பும், கண்களில் குறும்பும் மின்ன கம்பீரமாக மாணவன் ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

"சொல்லாமல் போறீயே..?'

"என்னது..?" என்று அவனைப் பார்த்து புரியாமல் கேட்டாள் அனிஷா.

"கால் வலிக்கு மூவ் வேணுமா..? அயோடேக்ஸ் வேணுமா..? இல்லை அமிர்தான்ஜன் ஸ்டிரக்ஸ் வேணுமா..?'

அனிதா அவனைப் பார்த்து முறைத்தாள்.

"என்ன கிண்டலா..?'

"இல்லை சுண்டல்..!" என்றான் அவன் நக்கலாக. அனிஷா விறுவிறுவென அவனிடம் வந்தாள்.

"ஏய் யார் நீ..? என்னை ஏன் வம்பு பண்றே..? கேட்கிறேன்ல யாரு நீ..?" அவன் கண்களை சிமிட்டி "அகஸ்டின்.." என்றான் அழுத்தமாக.

"டேய் ஷ்யாம் அகஸ்டின்..!" என்று அவனை அவன் நண்பன் அழைத்தான்.

அகஸ்டின் அவளைப் பார்த்து புன்னகைத்து 'பை' சொல்லிவிட்டு அவன் நண்பனோடு சென்று விட்டான்.

3

வகுப்பு ஆரம்பித்ததும் அந்த வகுப்பிற்கான ஆசிரியர் இன்னும் வராமல் இருந்தார். மாணவ, மாணவிகள் அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள். சற்று தாமதமாக வந்த ஆசிரியர் கூடவே இனிப்பான செய்தி ஒன்றையும் கொண்டு வந்தார்.

"டியர் ஸ்டூடண்ட்ஸ் இந்தவாட்டி நாம எக்ஸ்கர்ஷனுக்கு போகப் போற இடம் பெங்களூர் அண்ட் மைசூர்!" என்று அவர் சொன்னதுதான் தாமதம். அடுத்த நொடி தடதடவென்று பெண்ஜைத் தட்டி மாணவர்கள் தங்கள் சந்தோஷத்தை வெளிப்படுத்தினார்கள். மாணவிகளிடமும் சலசலப்பு ஏற்பட்டது. பெங்களூர், மைசூரில் சுற்றிப் பார்ப்பதற்கு என்னென்ன இடம் இருக்கிறது. என்னென்ன பொருட்கள் வாங்கலாம் போன்ற விஷயங்களை ஒருவருக்கொருவர் பேச ஆரம்பித்தார்கள். அனிஷா கணேஷை இடித்தாள்.

"என்னடா யோசனை?"

"பெங்களூர் கார்டன், மைசூர் பேலஸ் எல்லாம் ரொம்ப அழகாக இருக்கும். அதையெல்லாம் போட்டோ எடுப்பதற்கு சரியான கேமரா இல்லியே!"

"உங்க வீட்டில் தான் கோடாக் கேமரா இருக்கே."

"நீ இன்னும் அந்த காலத்துலேயே இரு. இந்த மாதிரி நல்ல இடத்தை எல்லாம் படம் எடுப்பதற்கு நல்ல டிஜிட்டல் கேமரா இருந்தால் நல்லாயிருக்கும்!"

"போற இடத்துல நம்ப ∴ப்ரெண்ட்ஸ்கிட்டே வாங்கிக்கலாம்!"

"அசிங்கமா அடுத்தவன்கிட்டே கையேந்த சொல்றீயா? நம்பகிட்டே ஒரு நல்ல கேமரா இருந்தால்தான் நல்லது!"

"எக்ஸ்கர்ஷன் போறோம் ஜாலியா சுத்தி பார்த்து என்ஜாய் பண்ணிட்டு வர்ற போறோம். இதுக்கு போய் ஒரு டிஜிட்டல் கேமரா வேணுமா?"

"நாளைக்கு உனக்கு கல்யாணம் ஆகி குழந்தை, குட்டின்னு பிறந்த பிறகு உன்னோட பசங்ககிட்டே நாங்க ரூமுக்கு போனப்போ எடுத்த போட்டோஸ்னு ஜாலியா காண்பிப்பேல அசிங்கமாயிருந்த என்னை கணேஷ் அங்கிள்தான் டிஜிட்டல் கேமராவினால் அழகா எடுத்தாருனு என்னை பற்றியும் பெருமையா சொல்லுவில்ல!" அனிஷா அவனைப் பார்த்து முறைத்தாள்.

"இது மாதிரியெல்லாம் முறைச்சுகிட்டு போஸ் கொடுக்காதே. அப்புறம் டிஜிட்டல் கேமரா வெடிச்சிடும்!"

வீட்டிற்கு சென்ற பிறகும் கணேஷின் மனம் ஒரு நிலையில் இல்லை. வீட்டிலிருந்த கேமராவை எடுத்துப்பார்த்தான். அந்த சின்ன கேமராவைப் பார்ப்பதற்கே வெறுப்பாக இருந்தது. எப்படியாவது ஒரு டிஜிட்டல் கேமரா வாங்கிடணும் என்று மனம் பிடிவாதமாக இருந்தது. மறுநாள் சனிக்கிழமையாக இருந்ததால் அவனுக்கு வசதியாக போனது. அரை நாள் கல்லூரி முடிவடைந்ததும் பஜாரில் இருந்த பிரம்மாண்டமான எலக்ட்ரானிக் ஷோரூமிற்கு சென்றான். ஏ.ஸி.யின் குளுமையுடனும் மெலிதான வெஸ்டர்ன் இசையுடனும் ஷோரூம் ரம்யமாக இருந்தது. பல கேமராக்களைப் பார்த்தபின் இறுதியாக சோனி டிஜிட்டல் கேமராவை தேர்வு செய்தான். கணேஷ் அதன் விலையை பார்த்து ஒரு கணம் ஆடிப் போனான். அதனுடைய விலை பத்தாயிரம் ரூபாய். குறைவான விலையில் இருக்கும் கேமராவை வாங்குவதற்கு அவன் மனம் இறங்கவில்லை. சோனிகேமராவை எப்படியாவது வாங்கிவிட வேண்டும் என்று அவன் மனம் துடித்தது.

கடைக்காரரிடம் "இந்த பீஸை எடுத்து வையுங்க. இரண்டு நாளில் வந்து வாங்கிக்கறேன்." என்று சொல்லிவிட்டு ஷோரூமை விட்டு வெளியே வந்தான். அவன் முகத்தில் வெயில் அடித்தது. பணத்திற்கு என்ன பண்ணுவது என்று தாடையை ஆள்காட்டி விரலால் நெருடியபடி யோசித்தான். பத்தாயிரத்துக்கு எங்கே போவது. யாரிடமாவது கடன் வாங்கணும். யாரிடம் கடன் கேட்பது? அதே தெருவில் சேட்டுக் கடை இருக்கிறதா என்று பார்த்தான்.

பக்கத்து தெருவில் இருந்தது. கறியும், ஸ்வீட்ஸும் நல்லா சாப்பிட்டு சாப்பிட்டு ஊதி போயிருந்த உடம்பை வெள்ளை நிற ஜிப்பாவிற்குள் நுழைந்திருந்தார் சேட்டுஷா. வலது கையிலும் இடது கையிலும் நான்கு விரல்களில் பெரிய சைஸில் மோதிரம் போட்டிருந்தார். அன்றைக்கு வந்திருந்த கலெக்ஷனை எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தார். கணேஷ் அவர் கடைக்குள் நுழைந்தான். மூக்குக் கண்ணாடியின் வழியாக கருவிழியை உயர்த்தி அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு மீண்டும் பண கட்டை எண்ண ஆரம்பித்தார் சேட்டுஷா.

"சேட்டுஜி எனக்கு ஒரு பத்தாயிரம் ரூபாய் வேணும். கேமரா வாங்குவதற்கு கையில் பணம் இல்லை!"

"கடன் தர்றேன். பணத்தை எப்போ திருப்பித் தருவே?"

"மூணு மாசத்துல திருப்பி தந்துடறேன்!"

"நம்பலாமா?"

"நிச்சயமாக என்னை நம்பலாம்!"

"இந்த பத்திரத்துல கையெழுத்து போட்டுக்குடு. அப்பதான் பணம் கிடைக்கும்!"

அவனிடம் ஒரு பத்திரத்தை கொடுத்தார். கணேஷ் பத்திரத்தை ஒரு பார்வை பார்த்துவிட்டு அவர் சொன்ன இடத்தில் கையெழுத்து போட்டு கொடுத்தான். இன்னொரு பத்திரத்தை எடுத்து அவனிடம் நீட்டினார்.

"என்னது இது?"

"இந்த பத்திரத்தில் ஜாமீன் கையெழுத்து வாங்கிட்டு வா!" கணேஷ் புரியாமல் அவரைப் பார்த்தான்.

"ஒருவேளை உன்னால் குறிப்பிட்ட தேதிக்குள் பணத்தை திருப்பி தரமுடியலைன்னா உனக்காக ஜாமீன் கையெழுத்து போட்டவரிடம் பணத்தை வசூலித்துக் கொள்வோம்!"

"எனக்காக ஜாமீன் கையெழுத்து போட்டுக் கொடுக்கும் அளவுக்கு யாரும் கிடையாது. ஜீ என் மேல் நம்பிக்கை இல்லையா? மூணு மாசத்துக்குள்ள நான் எப்படியும் உங்க பணத்தை திருப்பிக் கொடுத்துடுவேன். என்னை நம்புங்க!"

"இந்த கதையே வேண்டாம். உனக்கு தெரிஞ்ச யார்கிட்டேயாவது ஜாமீன் கையெழுத்து வாங்கிட்டு வா. அப்பதான் பணம் உன் கைக்கு கிடைக்கும். கிளம்பிக்கோ கிளம்பிக்கோ!"

கணேஷ் நறநறவென பல்லைக் கடித்தான். சே, எல்லாம் கூடி வர்ற நேரத்துல ஜாமீன் கையெழுத்து கேட்டு சொதப்பறே. "சரி நான் ஜாமீன் கையெழுத்து வாங்கிட்டு வர்றேன்!" என்று அந்த பத்திரத்தை எடுத்துக் கொண்டான்.

"அரே, ஜாமீன் கையெழுத்து போடப்போற நபரை இங்கே கூட்டிட்டு வந்து என் கண் முன்னாடி கையெழுத்து போட்டு தரச் சொல்லு. அப்புறம் பணத்தைத் தூக்கித் தறேன்!"

கணேஷ் குழம்பினான். யார்கிட்டே போய் இந்த விஷயத்தை குறித்து பேசுவது... எப்படி ஜாமீன் கையெழுத்து வாங்குவது? கல்லூரியில் பலத்த யோசனையுடன் அமர்ந்திருந்தான்.

அனிஷா அவனிடம் கேட்டாள். "எக்ஸ்கர்ஷனுக்கு கிளம்புவதற்கு இன்னும் இரண்டு நாள்தான் இருக்கு. முகத்தை இப்படி உம்முனு வெச்சிக்கிட்டிருக்கே!" கணேஷ் அவளைக் கூர்ந்து ஆராய்ந்தான். தயங்கியபடி சொன்னான்.

"டிஜிட்டல் கேமரா வாங்கிட்டேன்!"

அனிஷாவின் முகம் ஆச்சர்யத்தில் மலர்ந்தது.

"நிஜமாவே வாங்கிட்டியா?"

"இரண்டு பீஸ் நல்லா இருக்கு. அது ல எதை செலக்ட் பண்றதுதான் ஒரே குழப்பமாயிருக்கு. நீ வந்து கொஞ்சம் செலக்ட் பண்ணி தர்றீயா அனிஷா?" ல்லூரி முடிவடைந்ததும் அனிஷாவின் ஸ்கூட்டியில் இருவரும் பஜாருக்கு சென்றார்கள். கடையின் வெளியே கண்ணாடி கதவின் வழியாக கண்களை சுழல விட்டபடி அனிஷா கேட்டாள்.

"சின்ன கடையா இருக்கு. ஒரு கேமராவைக் கூட காணோமோ!"

"கேமரா ஷோ ரூம் பக்கத்து தெருவுல இருக்கு. இது ஆபீஸ் முதலாளிகிட்ட ஒரு கையெழுத்து போட்டு கொடுத்துட்டா போதும். அவர் கடையில் இருக்கிற மேனேஜருக்கு போன் பண்ணி சொல்லிடுவார். அப்புறம் நமக்கு பிடிச்ச கேமராவை செலக்ட் பண்ணிக்கலாம்!"

"இப்ப தெரியுதா இந்த அனிஷாவோட மகிமை. என்னோட கால் பட்டால்தான் எல்லா வேலையும் ஒழுங்கா நடக்கும்!"

"சரி, சரி. வா. உள்ளே போலாம்!" ஒருமுறை உள்ளே வந்த இருவரையும் சேட்டுஷா மாறி மாறி பார்த்தார்.

"சேட்டுஜி இதுதான் என்னோட ∴ப்ரெண்ட் அனிஷா. கையெழுத்து போட்டுக் கொடுப்பா!" சேட்டுஷா ஜாமீன் பத்திரத்தை எடுத்து மேஜையின் மீது போட்டார். அனிஷா அவர் காண்பித்த இடத்தில் வெகுளிதனமாக கையெழுத்தை போட்டுக் கொடுத்தாள்.

"அனிஷா கொஞ்சம் வெளியே இரு வந்துடறேன்!" என்றான் கணேஷ். அனிஷா கடையை விட்டு வெளியே சென்றதும் சேட்டுஷாவிடமிருந்து பணத்தை பெற்றுக் கொண்டான் கணேஷ். தன் போக்கில் இருந்த அனிஷா இதை கவனிக்கவில்லை. பின்பு இருவரும் ஷோரூமிற்கு சென்று பணத்தை கட்டி சோனி டிஜிட்டல் கேமராவை வாங்கினார்கள்.

"ஏதடா உனக்கு இவ்வளவு பணம்?"

"இது அய்யாவோட மகிமை. அய்யா கையை வெச்சால் தொட்டதெல்லாம் பணமாக கொட்டும்ல!"

"இதுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை. வாங்கி இருக்கிற கேமராவை ஒழுங்காக உபயோகிக்க தெரியுமாங்கிறதை முதலில் பாரு!"

4

நீல வானம் மஞ்சள் நிறமாக மாறிக் கொண்டிருந்தது. மாணவர்களுக்கென தனி பஸ்; மாணவர்களுக்கு தனி பஸ். லேட்டஸ்ட்டான பாடல் அதிர ஒரே ஆட்டமும் பாட்டமுமாக பஸ் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. பஸ்ஸின் ஓட்டத்திற்கு எதிராய் விரைந்து கொண்டிருந்த மரங்களின் ஊடே ஆரஞ்சு வட்ட நெருப்பு சூரியப் பந்து ஒளிந்து கண்ணாமூச்சி ஆடியது. அஸ்தமனச் சூரியன் தங்கமாய் சுடர்விட்டான்.

வயல்வெளிகள் அவற்றிற்கு ஓரம் கட்டியதுபோல் நீண்டும் அமர்ந்தும் விதவிதமாய் வளர்ந்து நின்ற மரங்கள் அவற்றோடு போட்டி போட்டு உயர்ந்து நிற்கும் மனிதனின் படைப்புகளான மின் கம்பங்கள். அங்கொன்றும் இங்கொன்றுமான வீடுகள்... எல்லாம் வேக வேகமாய் பின் நோக்கி ஓடின. வண்டி மட்டும் முன் நோக்கி ஓடியது. பெங்களூர் பிருந்தாவன் கார்டன், பார்க், அங்கிருந்த கோயில் என எல்லா இடத்தையும் டிஜிட்டல் கேமிராவினால் படம் பிடித்து தள்ளினான் கணேஷ். தோழிகளுடன் நின்று நிறைய போட்டோ எடுத்துக் கொண்டாள் அனிஷா. மைசூர் பேலஸ் நுழைவாயிலில் நின்றபடி அதன் அபரிமிதமான அழகைப் பார்த்துப் பிரமித்து போனாள் அனிஷா.

"இதோ பார்டா இங்கேயும் உன்னை வெளியே நிக்க வெச்சுட்டாங்களா. பின்னாடி பெரிய அரசியல்வாதியா வரப்போறேனு நினைக்கிறேன்!"

இந்த இடத்தில் தன்னை யார் கிண்டல் பண்றாங்க என்று அனிஷா கோபமாய் திரும்பி பார்த்தாள். பேலஸை நன்றாக சுற்றி பார்த்துவிட்டு நண்பர்களோடு வெளியே வந்த அகஸ்டின் கிண்டல் பண்ணினான்.

'இவன் இங்கேயும் வந்துட்டானா. நான் எங்கே போனாலும் அந்த விஷயத்தை எடுத்துக் கொண்டு கிண்டல் பண்றானே. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.'

அனிஷா தயங்கியபடி அவனிடம் சென்றாள்.

"அகஸ்டின்" என்று மெல்லிய குரலில் அழைத்தாள்.

அகஸ்டின் அவளை லட்சியமே செய்யாமல் நண்பர்களோடு அரட்டை அடித்துக் கொண்டிருந்தான். அனிஷா மீண்டும் அவனை அழைத்தாள்.

"அ... அகஸ்டின்"

இந்தமுறை அவளைத் திரும்பி பார்த்து "எஸ்" என்றான்.

"என்னை ஏன் எப்பவும் கிண்டல் பண்ணிக்கிட்டிருக்கே. மனசுக்கு ரொம்ப கஷ்டமாயிருக்கு. ஏன் இப்படி நடந்துக்கறே?"

"நான் ஒண்ணும் உன்னை கிண்டல் பண்ணலையே!"

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி அரசியல்வாதின்னு ஏதோ சொல்லி கிண்டல் பண்ணிக்கிட்டிருந்தே!"

"ஓஹோ. உனக்கு அரசியல்வாதியாகணும்னு ஆசையா இருக்கா. அதற்காகத்தான் இப்பவே தொண்டர்களை சேர்க்க ஆரம்பிச்சுட்டியா?"

அவனை சூழ்ந்திருந்த நண்பர்கள் 'கொள்' என சிரித்தார்கள். அனிஷா கண்களில் அனல் வீச, எரிச்சலாய் அவர்களை ஒரு பார்வை பார்த்துவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

பேலஸுக்குள்ளே மாணவ-மாணவிகளுடன் கணேஷ் சுற்றி பார்த்துக் கொண்டிருந்தான். முணுமுணுத்தவாறு அனிஷா அங்கு வந்தாள்.

"என்னாச்சு" என்று கணேஷ் கேட்டான்.

"அகஸ்டினோட தொல்லை தாங்க முடியலை. மறுபடி மறுபடி என்னை கிண்டல் பண்ணிக்கிட்டேயிருக்கான். நாம டூருக்கு வந்த இடத்தில் இவன் எப்படி?"

"அவங்களுக்கு டெல்லி, ஆக்ரா, மைசூர். நாம வந்த இதேநாளில் அவங்களும் இங்கே வந்திருக்காங்க!"

டூரிலிருந்து திரும்பின பிறகு போட்டோஸ் எல்லாத்தையும் பார்த்து ரசித்தார்கள். கிறிஸ்டல் கல் போல் பளிச்சென்று வந்திருந்தது அனைத்து போட்டோக்களும். அதன்பிறகு கணேஷ் வெகு நாட்களாக கல்லூரிக்கு வரவில்லை. கல்லூரி பக்கமே அவனை ஆளை காணோம். ஒருநாள் லீவு எடுத்தால்கூட நூறு வாட்டி காரணத்தை சொல்லிவிட்டு போவான். இரண்டு வாரமாக ஆளை காணோம். எங்கே போனான்? அனிஷா யோசனையுடன் அவளது ஸ்கூட்டியை எடுப்பதற்காக சென்றாள்.

அவளோட ஸ்கூட்டியின் அருகே சேட்டுஷா நின்று கொண்டிருந்தார். "சார் எப்படி இருக்கீங்க? உங்க கடையில வாங்கின கேமரா நல்லா இருக்கு. போட்டோஸ் எல்லாம் சூப்பரா வந்திருக்கு!" என்றாள்.

"நீங்க எடுத்த போட்டோ எப்படி வந்திருக்குனு கேட்பதற்காக நான் வரலை. என்னோட பணத்தை வசூலிப்பதற்காக வந்திருக்கேன்!"

"என்ன பணம்?"

அனிஷா புரியாமல் கேட்டாள்.

"நீங்க கேமரா வாங்கறதுக்காக உன்னோட நண்பன் கணேஷ்

என்கிட்டே பத்தாயிரம் ரூபாய் கடன் வாங்கியிருந்தான். வாங்கின பணத்தை இன்னும் திருப்பி தராமல் இருந்தால் எப்படி?"

"கேமரா வாங்கினப்போ கணேஷ் பணத்தை கட்டினதை என் கண்ணாலே பார்த்தேனே. அது அவனது பணம்!"

"அரே பத்தாயிரம் ரூபாய் என்கிட்டே கடன் வாங்கித்தான் கேமரா வாங்கியிருக்கான்!"

"அந்த ஷோரூம் ஓனர் நீங்க இல்லியா?"

"நான் நகை கடை வியாபாரி. வட்டிக்கு கடன் கொடுக்கிறவன். உன்னோட நண்பன் வட்டியையும் சரியா கட்டலை. கடனையும் திருப்பித்தர முடியாமல் ஆள் தலைமறைவாகிவிட்டான்."

கணேஷ் வெகுநாட்களாக கல்லூரிக்கு வராததன் காரணம் இப்போது புரிந்தது. அடி வயிற்றில் இனம் புரியாத கலக்கம் ஏற்பட்டது. "அவனுக்காக ஜாமீன் கையெழுத்து போட்டு கொடுத்தது நீதான். இப்போ நீதான் அந்த பணத்தை திருப்பித் தரணும்!"

அனிஷாவின் நெஞ்சும் வெகுவாக அதிர்ந்தது.

"அவன்தானே உங்ககிட்ட பணம் வாங்கினான். அவனையே தேடி கண்டுபிடிச்சு வாங்கிகோங்க. என்கிட்டே அவ்வளவு பணம் கிடையாது!"

"அவனைத் தேடி கண்டுபிடிச்சு பணத்தை வசூலிப்பது சுலபமான விஷயம் இல்லை. அவனுக்காக ஜாமின் கையெழுத்து போட்டு கொடுத்தது நீதான். மொத்த பணத்தையும் நீதான் திருப்பபித் தரணும். ரொம்ப முரண்டு பிடிக்காதே. அப்புறம் உன் வீட்டை கண்டுபிடிச்சு உன் அம்மா அப்பாகிட்டே விஷயத்தைச் சொல்லி பணத்தை வாங்க வேண்டியிருக்கும்!"

"அய்யோ எங்க வீட்டுக்கெல்லாம் வந்துடாதீங்க. கொஞ்சம் தயவு பண்ணுங்க. காலேஜ் படிக்கிற பொண்ணுகிட்டே அவ்வளவு பணம் எப்படி இருக்கும்? என்கிட்டே பணம் இல்லை. என்னை விட்டுடுங்க!" என்று கண்கலங்கினாள்.

"உன் நிலைமையைப் பார்த்தால் எனக்கு கஷ்டமாதானிருக்கு. ம்.... என்ன பண்ணலாம்? பேசாம இந்த ஸ்கூட்டியோட ஆர்.சி. புக்கை நாளைக்கு எடுத்துக்கிட்டு வா. இந்த ஸ்கூட்டியை என்கிட்டே ஒப்படைச்சிடு.

எனக்கு இந்த ஸ்கூட்டி போதும். நீயும் உன் நண்பன் மாதிரி தலைமறைவாயிடலாம்னு நினைக்காதே. தொலைச்சிடுவேன்!"

"ஸ்கூட்டியை நீங்க எடுத்துக்கிட்டிங்கன்னா, என் அம்மா, அப்பாகிட்டே என்ன பதில் சொல்லுவேன். எனக்கு ரொம்ப பயமா

இருக்கு. தயவுசெஞ்சு என்னை விட்டுடுங்க!"

அனிஷாவின் கண்ணீர் கெஞ்சல் அவர் காதில் போட்டுக் கொள்ளாமல் நடந்துபோய்க் கொண்டிருந்தார். சற்று தள்ளி நிறுத்தியிருந்த அவரது மாருதி வேனை நோக்கி பணம் பணம் என்று நச்சரிக்கிறானே இவனை எப்படி சமாளிப்பது என்று புரியாமல் தவித்தாள் அனிஷா!

5

கழுத்து வரைக்கும் போர்வையை இழுத்து விட்டுக் கொண்டு ஏழரை மணி ஆகியும் உறக்கத்தில் இருப்பதுபோல் கண்களை மூடியிருந்தாள் அனிஷா. நேற்று சேட்டுஷா மிரட்டி விட்டு போனதை நினைத்து நினைத்து நள்ளிரவு முழுவதும் உறங்காமல் இருந்தாள். அதிகபடியான பயத்தின் காரணமாகத்தான் இன்னும் படுக்கையில் இருந்து எழாமல் இருந்தாள். மழையில் நனைந்த ஓவியமாய் அலங்கோலமாய் அறைக்குள்ளேயே முடங்கி கிடந்தாள்.

அறையின் கதவை மெல்ல திறந்து கொண்டு உள்ளே வந்தாள் அம்மா காயத்ரி. அனிஷாவை தட்டி எழுப்பினாள்.

"டைம் ஆச்சு இன்னும் காலேஜுக்கு கிளம்பலை!"

"நான் இன்னிக்கு காலேஜுக்கு போகலைம்மா. உடம்பு சரியில்லைம்மா!"

காயத்ரி அவள் நெற்றியில் கை வைத்து பார்த்தாள்.

"சுடலையே. நல்லாதானேடி இருக்கே. எந்திரிச்சு காலேஜுக்கு கிளம்பற வழியைப் பாரு!"

"மனசு சரியில்லைம்மா!"

"காலேஜை கட்டடிக்கிறதுக்கு ஏதாவது சாக்கு போக்கு சொல்லிகிட்டிரு உங்கப்பா வந்தால்தான் நீ சரிபட்டு வருவே. என்னங்க..." என்று படுக்கை அறையின் வெளியே பார்த்து குரல் கொடுத்தாள்.

அப்பா என்ற பெயரை கேட்டவுடன் அனிஷா போர்வையை உதறிவிட்டு விசுக்கென எழுந்தாள்.

"அப்பாவை எதுக்காக இப்போ கூப்பிடறீங்க. இன்னிக்கு ஒருநாள் நான் காலேஜுக்கு போகலை. சொன்னா கொஞ்சம் புரிஞ்சுக்கோங்கம்மா!"

அதற்குள் கார்த்திகேயன் அங்கே வந்தார்.

"என்னம்மா, ஏன் இன்னிக்கு காலேஜுக்கு லீவு போடணும்னு சொல்றே?"

"வ... வந்து... அ...ப்பா!"

அப்பாவைப் பார்த்து பயத்துடன் எச்சில் விழுங்கினாள்.

"சும்மாவே நீ மார்க் வாங்கறது ரொம்ப லட்சணம். இதுல தேவையில்லாம காலேஜை கட்டடிச்சிட்டு வீட்டுல உட்காரணும்னு நினைக்காதே. முதல்ல எந்திரிச்சு கிளம்பற வழியைப் பாரு. லேட்டாயிடுச்சேனு ஸ்கூட்டியை வேகமாக ஓட்டிக்கிட்டு போகாதே!" என்றாள் காயத்ரி.

"நான் வேணும்னா இன்னிக்கு ஒருநாள் பஸ்சுல போறேனே!"

"எதுலையாவது போ. ஆனா காலேஜை கட் அடிக்காமல் ஒழுங்கா போ!"

"நான் ஆபீஸ் போகும்போது உன்னை காலேஜில் டிராப் பண்ணிடறேன்!" என்றானர் கார்த்திகேயன்.

சரி என்று சொல்வதா, வேண்டாம் என்று சொல்வதா என்பது தெரியாமல் தவித்துப் போனாள் அனிஷா.

சேட்டுஷா அப்பாவை மடக்கிப் பிடித்து எல்லாவற்றையும் ஒப்பித்து விட்டால், என்ன செய்வது என்று தெரியாமல் நடுக்கத்துடன் அப்பாவுடன் கிளம்பினாள். வழிநெடுக அவள் நெஞ்சமெல்லாம் திக் திக் என்று அடித்துக் கொண்டது. கல்லூரி வாசலில் பைக்கிள் டிராப் பண்ணினார் கார்த்திக்கேயன்.

விழிகளில் தேக்கி வைத்திருந்த பயத்துடன் நாலாபுறமும் பார்த்தாள் அனிஷா. சேட்டுஷா இருக்கும் சுவடு எந்தப்பக்கமும் தெரியவில்லை.

சின்னப் பெண்ணை எதற்காக தொந்தரவு செய்யணும் என்று நினைத்தானோ. பரவாயில்லை என நினைத்துக் கொண்டாள்.

"மாலை நான் பஸ்ஸில் வந்துடறேன்!" என்ற கார்த்திகேயனிடம் சொல்லிவிட்டு விறுவிறுவென கல்லூரிக்குள் சென்றாள். அவள் வகுப்பிற்குள் சென்று அமர்ந்து கொண்டாள். அன்றைக்கென்று அவளுக்கு ஸ்பெஷல் கிளாஸ் வைத்து விட்டார்கள். வகுப்பு முடிவடைந்ததும் வெளியே வந்தாள். கல்லூரியே வெறிச்சோடி போய் கிடந்தது. அவள் ஸ்டாப்பிற்கு பஸ்ஸை பிடிப்பதற்காக தலையைக் குனிந்துகொண்டு தனியாக நடந்து போய்க் கொண்டிருந்தாள்.

"நில்லுமா!"

குரல் கேட்டு அனிஷா திரும்பி பார்த்தாள். சேட்டுஷா நின்று

கொண்டிருந்தார். அவருடன் இரண்டு கந்து வட்டிக்காரர்கள் நின்று கொண்டிருந்தார்கள். சேட்டுஷாவை கண்டதும் அனிஷா எச்சில் விழுங்கினாள்.

"புத்திசாலித்தனமா ஸ்கூட்டியை எடுத்துக்கிட்டு வரலைன்னா உன்கிட்டேயிருந்து பணத்தை வாங்க முடியாதுன்னு நினைச்சியா?"

"ஸ...ஸாரி. நாளைக்கு கண்டிப்பா ஆர்.சி.புக்கையும், ஸ்கூட்டியையும் உங்ககிட்டே ஒப்படைச்சிடுறேன். என்னை நம்புங்க!"

"உன்னோட ஸ்கூட்டி எங்களுக்கு வேண்டாம்!" என்றார் சேட்டுஷா. இதைக்கேட்ட அனிஷாவின் உடம்பில் ஓடிக் கொண்டிருந்த பயமும், நடுக்கமும் விலகியது.

"தாங்க்யூ சார்... தாங்க்யூ சார்..."

"உன்னோட ஸ்கூட்டிதான் வேண்டாமென்று சொன்னேன். நம்ப பசங்களுக்கு உன்னை ரொம்ப புடிச்சி போச்சு. இவனுங்ககூட இப்போ போ. ஒரு மணி நேரத்துல திருப்பி அனுப்பிடுவாங்க!" என்றார் சேட்டுஷா. வயசுல பெரியவர் இந்த அளவிற்கு வக்கிரமா பேசறாரேன்னு திக்கென அதிர்ந்தாள் அனிஷா.

"டேய், இவளை நம்ப மாருதி வேன்ல ஏத்துங்கடா!"

கந்து வட்டிக்காரர்கள் அவளைப் பார்த்த பார்வை அனிஷாவிற்கு சுத்தமாய் பிடிக்கவில்லை. மது குடித்திருப்பானுங்க போலும். வாடை வீசியது. ஆளுக்கொரு புறமாக அவள் கையை இறுக்கமாக பற்றினார்கள். அவள் கண்களில் மருட்சி படர்ந்தது.

"என்னைத் தயவுசெஞ்சு விட்டுடுங்க. யாராவது காப்பாத்துங்களேன்!" அனிஷா பலகீனமாக அலறினாள்.

"ஏய், ஸ்டாப் தி நான்சென்ஸ்!"

கணீரென்று குரல் வந்த திசையை அனைவரும் திரும்பி பார்த்தார்கள். ஜீன்ஸ பேண்ட்டின் பாக்கெட்டில் கையை விட்டபடி அகஸ்டின் நின்று கொண்டிருந்தான். அகஸ்டினை கண்டதும் கந்து வட்டிக்காரர்களிடம் இருந்து கையை உதறிக் கொண்டு அவனிடம் ஓடி வந்தாள்.

"அகஸ்டின் என்னைக் காப்பாத்து. பத்தாயிரம் ரூபாய் பணத்தை திருப்பிக் குடு. முடியலைன்னா நீ வான்னு மிரட்டுறாங்க. எனக்கு ரொம்ப பயமாயிருக்கு!" அகஸ்டின் முகத்திற்கு பின்னால் மறைந்து கொண்டு விக்கி விக்கி அழுதாள்.

"நான் இருக்கேன். பயப்படாதே." என்றான் அகஸ்டின். பின்பு சேட்டுஷாவை ஏறிட்டான்.

"உங்களுக்கு பத்தாயிரம் பணம்தானே வேணும். அந்த

பணத்தை நான் உங்களுக்கு திருப்பிக் கொடுத்துட்டா இந்த பொண்ணை விட்டுடுவீங்களா?"

"கண்டிப்பாக!"

தோளின் குறுக்கே மாட்டியிருந்த காலேஜ் பேக்கின் ஜிப்பை திறந்தான் அகஸ்டின். உள்ளேயிருந்து ஒரு பழுப்பு நிற கவரை எடுத்தான். அந்த கவரை பிரித்து அதிலிருந்து ஆயிரம் ரூபாய் கட்டுக்களை எடுத்து சேட்டுஷாவிடம் கொடுத்தான். சேட்டுஷா மோதிர விரலால் பணத்தை எண்ணிச் சரிபார்த்துக் கொண்டார்.

"டேய், நமக்குச் சேரவேண்டிய பணம் கிடைச்சாச்சு. வாங்கடா போகலாம்!"

சின்ன பெண்ணிடம் தகாத முறையில் நடந்து கொண்டோமே என்ற சின்ன வருத்தம்கூட இல்லாமல் சென்று விட்டார்கள். அனிஷாவிற்கு இன்னும் படபடப்பு அடங்காமல் இருந்தது. தொடர்ந்து அழுதுகொண்டே இருந்தாள். அகஸ்டின் அவளுடைய தலையை ஆறுதலாக வருடிவிட்டான்.

"இன்னும் ஏன் அழறே? நான்தான் அவங்க கேட்ட பணத்தை குடுத்து அனுப்பிட்டேன்ல."

அவளால் அழுகையை கட்டுப்படுத்த முடியவில்லை. அவளிடம் தகாத முறையில் நடக்க முயன்றதால் அந்த அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீளாமல் இருந்தாள். விடாமல் அழுதுகொண்டிருந்த அவளைத் தோளோடு அணைத்துக் கொண்டான் அகஸ்டின்.

அவனுடைய அரவணைப்பும் ஆறுதலான வார்த்தைகளும் அவளுக்கு இதமாக இருந்தது. மெதுவாக அவனிடமிருந்து விலகிக் கொண்டாள்.

"நீ எப்படி இங்கே?"

"தட் இஸ் அகஸ்டின்!"

"சொல்லு கேட்கிறேன்ல!"

"ஆரம்பத்துல இருந்தே உன்னை கவனிச்சிக்கிட்டு வர்றேன். இரண்டு நாளா ரொம்ப டிஸ்டர்பாக தெரிஞ்சே. எதனால நீ கலங்கி போயிருக்கிறேங்கிறதை கண்டுபிடிச்சேன். எப்படி அய்யா வந்து அதிரடியா கலக்கிட்டோம்ல. ம்... நீ எப்படி இந்த பிரச்சினையில் மாட்டிக்கிட்டே?"

"எல்லாம் அந்த கணேஷால் வந்தது. ஒரு டிஜிட்டல் கேமரா வாங்குவதற்காக இந்த சேட்டுகிட்டே பணம் வாங்கியிருக்கான். என்னை ஈஸியா ஏமாத்தி ஜாமின் கையெழுத்து போட வெச்சுட்டான். கடன்...

ஜாமீன் கையெழுத்து போன்ற விஷயங்களை எல்லாம் என் வாழ்க்கையில் இப்போதான் சந்திக்கிறேன். யாரையும் சுலபத்துல நம்பி ஜாமின் கையெழுத்து போட்டுவிடக்கூடாது. ரொம்பவே பயந்து போயிட்டேன்!"

"நீயும் கணேஷும் க்ளோஸ் ஃப்ரெண்ட்டா?"

"க்ளோஸ் எல்லாம் கிடையாது. நல்ல ஃப்ரெண்ட் என்று நினைத்து அவனிடம் பேசினேன். இதுமாதிரி பிரச்சினையில் என்னை மாட்டி விட்டதால் நல்ல ஃப்ரெண்ட் லிஸ்டில் இருந்து அவனைத் தூக்கணும். பெரிய பிரச்சினையில் இருந்து என்னை காப்பாற்றினதுக்கு ரொம்ப தாங்க்ஸ் அகஸ்டின். உன்னால் எப்படி அவ்வளவு பெரிய தொகையை குடுக்க முடிஞ்சது!"

"எங்கப்பா பெரிய ரியல் எஸ்டேட் பிஸினஸ் மேன். ஸோ, பண பிரச்சினை சுத்தமா கிடையாது. நீ என்பதால்தான் நான் வந்து காப்பாற்றினேன். இதே வேறு யாராக இருந்திருந்தாலும் விட்டுட்டு போயிட்டே இருந்திருப்பேன். உனக்கு ஏதாவது ஒண்ணுன்னா என்னால அதை தாங்கிக்க முடியாது அனிஷா. நீ எனக்கு எப்பவுமே ஸபெஷல்தான்!"

"ஸ்... ஸ்பெஷலென்றால்?"

"என் இதயத்தில் உனக்கு மட்டும்தான் இடம் உண்டு. நான் வெளிப்படையாகவே சொல்றேன். எனக்கு உன்னை பிடிச்சிருக்கு அனிஷா. ஐ லவ் யூ ஸோ மச்! என்றான் அகஸ்டின்.

அனிஷா பேச்சற்று நின்றுவிட்டாள். மனதில் சின்ன பதட்டம், படபடப்பு ஏற்பட்டது. கூடவே இனம் தெரியாத சலனம் உண்டானது.

"உன்னுடைய பதிலை உடனடியாக வெளிப்படுத்தணும்னு அவசியமில்லை. டைம் எடுத்துக்கோ. உனக்கு என்னை பிடிச்சிருந்தால் நான் அதிர்ஷ்டசாலி. என்னை பிடிக்கவில்லையென்றாலும் சொல்லிவிடு..." அகஸ்டின் முடிப்பதற்குள்...

"அப்படியெல்லாம் கிடையாது. எப்போ ஒரு தெய்வம் மாதிரி வந்து என்னை காப்பாற்றினாயோ அந்த நொடியே என் மனசுக்குள்ளே இடம் பிடிச்சிட்டே. இனிமேல் நீதான் என் உலகம். நீ இல்லாத வாழ்க்கையை என்னால் நினைச்சுகூட பார்க்கமுடியாது!"

இமைகள் படபடக்க கடகடவென சொன்னாள் அனிஷா.

6

இரவு முழுவதும் அகஸ்டின் நினைவால் தூக்கத்தை தொலைத்திருந்தாள் அனிஷா. இத்தனை வருடங்களாய் பத்திரமாய் வைத்திருந்த எனது இதயத்தை ஒரேநாளில் களவாடிப் போய் விட்டானே. அவள் உள்ளத்தில் தங்க மீன்கள் துள்ளிக் குதித்தன. அவனை அவளுக்கு மிகவும் பிடித்துப் போனது. கணேஷால் ஏற்பட்ட பிரச்சினையை யாரிடமும் சொல்லி தீர்வு காணமுடியாமல் மனதிற்குள்ளே புழுங்கித் தவித்துக் கொண்டிருந்த வேளையில் கடவுள் மாதிரி அகஸ்டின் வந்து அவளைக் காப்பாற்றியதால் அவன் மீது அளவு கடந்த பிரியமும், மரியாதையும் ஏற்பட்டது. அவன் காலை தொட்டு வணங்க வேண்டும் போலிருந்தது. அவளும் அவனுள் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறான் என்று நினைக்கையில் கோவில் கோபுரத்தைவிட உயரமாய் குதிக்க வேண்டும்போல் மனம் துள்ளியது. அனிஷாவும் அகஸ்டினும் யார் கண்ணிலும் படாமல் சந்தித்து வந்தார்கள். முதல் சில தடவைகள் திருட்டுத்தனமாய் சந்திக்கும்போது பயம் உடல் முழுவதும் உதறலெடுக்கும். பழகப்பழக பயத்தின் அளவுகோல் குறைந்து மனதிற்கு திருட்டுத்தனமான சந்திப்பு பிடித்துதான் போனது.

அந்தப் பழங்கால ண்டபத்தை நெருக்கி தள்ளியவாறு இரு பக்கங்களிலும் வளர்ந்த பிரம்மாண்டமான இரண்டு மரங்கள் ஒன்றையொன்று தழுவிக்கொண்டு ஓங்கி உயர்ந்து நின்றன. இரண்டுமே புராதான விருட்சங்கள். ஒன்று கோகர்ணத்து ஆலமரம். இன்னொன்று வெள்ளை வெளேரென்ற அரச மரம்.

மண்டபத்துக்கு அப்பால் தெரிகின்றனவே கோயில் கதவுகள். இரட்டை மரங்களை இழைத்து உருவாக்கிய அந்தக் கதவுகள் இரும்பு மதில் போன்று உறுதியானவை. அந்தக் காலத்தில் திடகாத்திரமான இளைஞர்களேயன்றி மற்றவர்களால் அசைக்கக்கூட முடியாத கதவுகள். இப்போது வேகமாக ஒரு தள்ளு தள்ளினால்கூட வெலவெலத்து ஆடுகின்றன. கதவுகளைத் திறந்ததும் படிக்கட்டுகள் தெரிகின்றன. காவியும், வெள்ளையுமான வர்ணம் தீட்டிய படிக்கட்டுக்கள். இருபுறமும் வரிசையாக அமைந்த கல் தூண்கள் மீது இணை இணையாக செதுக்கிய தாமரைச் சிற்பங்கள். படிக்கட்டின் மேலே இருபக்கமும் துவார பாலகர்கள், ஜெயவிஜயர்கள் கம்பீரமாக நிற்கிறார்கள். இந்தக் கோயிலில் ஓர் அதிசயம் என்னவென்றால் எல்லாமே கங்கையும் யமுனையும் போன்று இணைந்தபடி இரட்டையாகவே அமைந்துள்ளன.

கருவறையிலிருள்ள லட்சுமி, நாராயண விக்கிரகங்கம்

இணையாகவே காட்சியளிக்கின்றன. நான்கு தலைமுறைகளாக தூபத்ப ஆரத்திகளால் ஆராதிக்கப் பெற்று வரும் விக்கிரகங்கள். ஆனால் அங்கு சந்தியாகால பூஜையின் போது ஒரே ஒரு ஜால்ரா ஒலிக்கிறது. ஒரே ஒரு சங்கு ஊதப்படுகிறது. தன்னந்தனியாக ஒரு அர்ச்சகர் அமர்ந்து மந்திரங்களை ஓதி ஆராதனை செய்கிறார். மணியடிப்பதும் அவர்தான். அங்கே தூணில் மறைவில் அகஸ்டின் அனிஷாவிற்காக காத்துக் கொண்டிருந்தான். அனிஷாவின் செல்போனுக்கு டிரை பண்ணினான். முழு ரிங் அடித்து ஓய்ந்திருந்தது.

வானில் பறந்த பறவையை அன்னாந்து பார்த்தான். பகலவன் மறையும் வேளையில் மங்கிய ஒளியில் குளித்தெழுந்த நீலவானம் ஆதியந்தமின்றி பரவி நிற்கும் அந்த ஏகாந்த வேளையில் குழுவிலிருந்து பிரிந்த தன்னந்தனியான பறவையொன்று வான்பாதையைக் கிழித்தவாறு தனியாகவே பறக்கிறது. மேலே வானம் கீழே பூமி இவையிரண்டுமே அதற்கு துணை புரிவதற்கும் பதிலாக அதன் உள்ளதிலே மேலும் மேலும் தனிமையா அல்லவா நிரப்புகின்றன. பாவம் அந்தப்பட்சி திக்குத் தெரியாத ஆயாகத்தில் கொந்தத்தின் அத்துவானத்தில் எங்கோ மறைந்து கரைந்து போகிறது. தான் இருப்பது வானத்திலோ அல்லது பூமியிலா என்ற பேதமும் இல்லாமல் பறக்கிறது.

கீச், கீச் என்று கத்தியவாறு அந்தப் பறவையின் குரலில் அப்படியொரு தீவிரம். கோயிலின் உள்ளே ஓதப்பெறும் மந்திரவொலியின் தீட்சண்யம் போல அந்த மெல்லிய ஜால்ராவின் கூர்மையான நாதம் போல. அனிஷா சற்று தாமதமாகத்தான் அங்கு வந்தாள். நழுவி விழுந்த துப்பட்டாவை தோளில் போட்டபடி அகஸ்டின் அருகில் அமர்ந்தாள்.

"வாம்மா தாயே. ஒரு சின்னப் பையனை இப்படி காக்க வைக்கலாமா? அவனது குழந்தை மனசு என்ன பாடுபடும்னு தெரியாதா? ஏன்டா லேட்?"

"வழியில என்னோட ஃப்ரெண்ட்கிட்டே மாட்டிக்கிட்டேன். அவகிட்ட பேசிகிட்டிருந்ததில் அரை மணி நேரம் லேட்டாயிடுச்சு. ஸாரிப்பா!"

"அது யாரு உன்னோட ஃப்ரெண்ட் எனக்குத் தெரியாமல்!"

"அவள் பெயர் ஆராதனா. ரொம்ப அழகா இருப்பா. அவள்தான் என்னுடைய உயிர் தோழி. சின்ன வயசுலயிருந்தே நாங்க இரண்டு பேரும் ஒரே ஸ்கூல்ல படிச்சோம். ஒரே கல்லூரியில் சேரணும்னு ஆசைப்பட்டோம். எனக்கு நம்ப மேரி காலேஜ்ல இடம் கிடைச்சது. அவளுக்கு காமாட்சி ஆர்ட்ஸ் காலேஜில் சீட் கிடைச்சது.

பேசினால் அது அன்றைக்கும் முழுவதும் புத்துணர்ச்சியாக இருக்கும்!"
அகஸ்டின் அனிஷாவோட செல்போனை ஆராய்ந்து கொண்டிருந்தான்.
"நான் சொல்றதை கவனிக்கிறீயா, இல்லையா?"

"கவனிச்சிக்கிட்டுதான் இருக்கேன். நம்ப காதல் விஷயத்தை ஃப்ரெண்டுகிட்டே சொல்லிட்டியா?"

"இன்னும் இல்லை..."

"யார்கிட்டேயும் அவசரப்பட்டு உளறிடாதே. ரகசியமா வெச்சுக்கோ."

"சரி!"

"உன்னோட செல்போனில் காலர் டியூன் செட் பண்ணலையா? நாளையிலிருந்து உன்னுடைய செல்போனுக்கு அழகான பாடலை காலர் டியூனில் செட் பண்ணி வைக்கிறேன்!"

"எந்த பாட்டு செலக்ட் பண்ணப்போறே?"

"இச்சுதா இச்சுதா கன்னத்துல இச்சுதா!"

அவனது அழகான முகத்தை அவளின் முகத்திற்கு மிக அருகில் கொண்டு வந்தான். மென்மையான உள்ளங்கையால் அவன் முகத்தை அவள் தள்ளி விட்டாள். அவனது மீசையும் அரும்பு தாடியும் அவளது உள்ளங்கையில் நெருட அவள் உடலில் மின்சார அதிர்வலைகள் உண்டானது.

"நான் வந்ததே லேட். இன்னும் கொஞ்சம் நேரம் உன்னோட இருந்தால் கூட கொஞ்சம் லேட்டாயிடும். நான் கிளம்பறேன் அகஸ்டின்!" அவளது செல்போனை அவனிடம் இருந்து வாங்கிக் கொண்டு கிளம்பினாள். அவள் உருவம் மறையும்வரை கோயில் வாசலில் நின்று பார்த்த பிறகே அவன் கிளம்பினான்.

7

ஐம்பது கிலோ மீட்டர் ஸ்பீடில் கைனடிக் ஹோண்டாவை விரட்டிக் கொண்டிருந்தாள் ஆராதனா. சிவப்பு பூக்கள் பூத்திருந்த சுடிதார் அணிந்திருந்தாள். சராசரி பெண்ணிற்கே உரிய உயரம். மாநிறம்தான் என்றாலும் லட்சணமான வட்ட முகம். காதுகளில் தொங்கும் சின்ன வளையங்கள், கூரான நாசியில் பளிச்சிடும் ஒற்றைக்கல் மூக்குத்தி, வரைந்ததுபோல மேல் உதடு, சற்றே பருமனில் கீழ் உதடு, மாசு மருவில்லாத கன்னங்கள், இயற்கையாகவே வில்லாய் வளைந்திருந்த புருவங்களுக்கு கீழே அழகிய பெரிய கண்கள்.

அவ்வளவு வாகன இரைச்சலிலும் அவளோட செல்போன் சிணுங்கியது அவளுக்கு கேட்டது. வண்டியை ஒரு ஓரமாக ஓரங்கட்டி காலேஜ் பேக்கை திறந்து உள்ளே சிணுங்கிக் கொண்டிருந்த செல்போனை வெளியே எடுத்தாள். உயிர்பித்து காதுக்கு கொடுத்தாள்.
"மே ஐ ஸ்பீக் டூ ஆராதனா"

மறுமுனையில் ஒரு கரகரப்பான குரல் கேட்டது.

"எஸ் யார் பேசறது?" என்று அவள் கேட்டாள்.

"என்னுடைய பெயரைச் சொன்னால்தான் என்கிட்ட பேசுவியா? என் மனசை எவ்வளவோ கட்டுப்படுத்திப் பார்த்தேன். ஆனால் உன்னைதான் காதலிப்பேன்னு மனசு அடம்பிடிக்குது. என்னிக்கு உன்னை நேரில் பார்த்தேனோ அந்த நொடியே என் மனசை தொலைச்சிட்டேன். ஐ லவ் யூ ஆராதனா!"

அடுத்த நொடி இணைப்பு துண்டிக்கப்பட்டது. பேசினவனின் குரலும் பேசிய விதமும் கவரும் வகையில் இருந்ததால் அவன் மீது இனம் புரியாத ஆர்வம் வந்தது.

யாரிவன்? என்னை எப்போது பார்த்தான்? செல்போனை பேக்கினுள் போட்டு ஜிப்பை மூடினாள். வண்டியை ஸ்டார்ட் செய்தாள். வழிநெடுக அவனை பற்றியே சிந்தனை வந்து வந்து அலைமோதியது. வீட்டிற்கு சென்ற பிறகும் அவனது நினைவுகள் அவளையே சுற்றி சுற்றி வந்தன. கல்லூரியில் நடத்திய பாடத்தை படிக்கலாம் என்று புத்தகத்தை திறந்தாள். மனம் பாடத்தின் மீது பதியவில்லை.
மறுபடியும் அவன் பேசமாட்டானா? என்ற தவிப்புடன் செல்போனை கையில் எடுத்து பார்த்தாள். சரியாக ஒரு மணி நேரம் கழித்து அவனிடமிருந்து போன் வந்தது. ஆர்வத்துடன் எடுத்து பேசினாள்.

"வீட்டிற்கு பத்திரமாக போய் சேர்ந்தாச்சா?" என்று அவன் கேட்டான்.

"ம்... யார் நீங்க? எப்போ என்னை பார்த்தீங்க?" என்று கேட்டாள் ஆராதனா.

மறுமனையிலிருந்து பதிலேதும் இல்லை.

"ஹலோ, உங்களைத்தான் கேட்கிறேன். யார் நீங்க? என்னை என்னிக்கு பார்த்தீங்க?"

"சொல்கிறேன். ஆனால் போனில் இல்லை நேரில்!"

"நேரிலா? நீங்க யார் என்பதே எனக்கு தெரியாது. தெரியாமல் எப்படி?"

"நாளைக்கு ஈவினிங் நீங்க படிக்கிற காலேஜுக்கு நேர் ரோட்டில் இரண்டாவது லெஃப்டில் திரும்பினால் சிறிய பூங்கா ஒன்று இருக்கும். நான் அங்கே உனக்காக காத்துக்கிட்டிருப்பேன். என்னை

ஏமாத்திடாதே தவறாமல் வந்திடு!" விஷயத்தை சொல்லிவிட்டு இணைப்பை அவன் பட்டென துண்டித்தான்.

மறுநாள் கல்லூரியில் வகுப்பில் ஆராதனாவிற்கு கவனம் செல்லவில்லை. மனம் குழம்பியது. அவன் வரச்சொன்ன இடத்துக்கு போகலாமா, வேண்டாமா? அவன் யாராக இருக்கும்? மகுடிக்கு கட்டுப்பட்ட பாம்பு மாதிரி அவன் வார்த்தைக்கு கட்டுப்பட்டு அவனை சந்திப்பதென தீர்மானித்தாள். ஒவ்வொரு வகுப்பாக முடிய முடிய அவளது படபடப்பு அதிகரித்தது. யார் அவன்? எப்படி இருப்பான்? கல்லூரி முடிவடைந்ததும் அவளோட படபடப்பு நூறு டிகிரியை தொட்டது.

கைனடிக் ஹோண்டாவை எடுத்துக் கொண்டு கிளம்பினாள். அவன் கூறின பூங்காவிற்கு வந்தாள்.

பூங்காவிற்கு வெளியே வண்டியை ஸ்டாண்டிட்டு லாக் செய்துவிட்டு காலேஜ் பேக்கை தோளில் போட்டுக் கொண்டு பூங்காவிற்குள் நுழைந்தாள். காதல் ஜோடிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக அமர்ந்திருந்தார்கள். சிலர் தன்னந்தனியாக இளைப்பாற வந்திருந்தர்கள். அவன் எங்கே இருக்கிறான்? கருவிழியை நாலா பக்கமும் சுழலவிட்டாள். அப்போது அவள் செல்போன் சிணுங்கியது. அவன்தான் பேசினான்.

"நான் உன்னை பார்த்துட்டேன். வயலட் கலர் சுடிதாரில் வெள்ள நிற துப்பட்டாவுடன் இருப்பது நீதானே.

நான் வலதுபுறமாக இருக்கும் அசோக மரத்தின் கீழ் இருக்கும் சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்திருக்கேன். இங்கே வா!" என்றான்.

ஆராதனா வலது புறமாக தலையை திருப்பி பார்த்தாள். சற்று தள்ளி இருந்த அசோக மரத்தின் கீழிருந்த சிமெண்ட் பெஞ்சில் அவன் கால் மேல் கால் போட்டு அமர்ந்திருந்தான். ப்ளூ கலர் ஜீன்ஸும், ரெட் கலர் டீ ஷர்ட்டும் அணிந்திருந்தான். அவனது குரலும் பேச்சும் மட்டுமில்லாமல் நேரிலும் ஆள் பார்ப்பதற்கு ஸ்மார்ட்டாக இருந்தான்.

ஆராதனா ஒரு நொடி அப்படியே நின்றாள். மனதில் ஏதோ இனம் தெரியாத சலனம், சின்னப் பதட்டம் படபடப்பு ஏன்? ஏன் இப்படி? இவனை பார்த்ததாலா? யார் இவன்? இவனைப் பார்த்தவுடன் ஏன் இந்த நூதன உணர்வு? முதல் பார்வையிலேயே அவள் மனதில் அவன் பதிந்து அவளுக்குள் தாக்கத்தை எப்படி ஏற்படுத்தினான் என்பதை அவளால் உணரமுடியவில்லை.

"ஹாய் ஆராதனா. என்ன அப்படி பார்க்கிறே? என்னை நேரில் பார்த்தவுடன் அசந்து போயிட்டியா?

எத்தனையோ பெண்கள் என் பின்னாடி சுற்றினாலும் என்னமோ தெரியலை உன்னை பார்த்தபிறகு உன்னை மட்டும்தான் காதலிக்கணும் என்று என் உள்மனசு சொல்லுது!"

"என்னை எப்படி உங்களுக்குத் தெரியும்?"

"நாகரிகமான பெண்களை என்னோட கேமரா கண்கள் எந்த ஒரு மூலை முடுக்கில் இருந்தாலும் கண்டுபிடித்துவிடும்!"

"விளையாடாதீங்க. என்னை எப்படி தெரியும்னு சொல்லுங்க. என்னோட செல் நம்பர் உங்களுக்கு எப்படி கிடைச்சது?"

"உலக அழகி ஐஸ்வர்யாவின் நம்பரையே எங்களால் கண்டுபிடிக்க முடியும். உள்ளூர் அழகி உன்னோட நம்பரை கண்டுபிடிப்பதற்கு எந்த ஒரு ஆக்ஸ்போர்டு யினிவர்சிட்டியிலும் போய் படிச்சிட்டு வரணும்னு அவசியமில்லை!"

ஆராதனா சிரித்தாள். அவனது துருதுருப்பும் வசீகரமான பேச்சும் அவளை வெகுவாக கவர்ந்திழுத்தது. அவன் ஆராதனாவின் முகத்தை உற்றுநோக்கினான். வெட்கத்தாலும், சந்தோஷத்தாலும் அவள் முகம் சிவந்திருப்பதை கண்டான். உள்ளுக்குள் சீட்டி அடித்துக் கொண்டான். 'ஹேய் பட்சி கவுந்துட்டாடா!"

ஆராதனா உதட்டை குவித்துக் கேட்டாள் "உன் பெயர் என்ன?" அவன் கண்களை சிமிட்டி "ஷ்யாம்" என்றான்.

8

'ஷ்யாம்' ஆராதனா உதட்டுக்குள் உச்சரித்துப் பார்த்தாள். "உன்னுடைய பெயர்கூட நல்லாயிருக்கு. நீ என்ன பண்றே ஷ்யாம்?"

"மேரி ஆர்ட்ஸ் காலேஜில் பி.எஸ்.சி., கேம்ஸ் பைனல் இயர் படிக்கிறேன்!" இதைக்கேட்ட ஆராதனாவின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன.

"வாட்? மேரி ஆர்ட்ஸ் காலேஜிலா படிக்கிறே. அங்கேதான் என்னோட உயிர் தோழி அனிஷா படிக்கிறாள்!"

"எனக்குதான் தெரியுமே!"

"ரியலி! நீ அவளை பார்த்திருக்கியா? பேசி இருக்கியா?"

"சும்மா சொன்னேன். அனிஷாங்கிற பெயரில் எனக்கு யாரையும் தெரியாது. காலேஜுக்குள் போயிட்டால் நானுண்டு என் படிப்பு உண்டு என்றுதான் இருப்பேன். உண்மையை சொல்லணும்னா என்னோட கிளாசில் படிக்கிற பொண்ணுங்க பெயர்கூட எனக்குத் தெரியாது!"

"என்னோட ∴ப்ரெண்ட் படிக்கிற காலேஜில்தான் நீயும் படிக்கிறேன்ன நினைக்கும்போது சந்தோஷமாக இருக்கு. அனிஷாவை நேரில் பார்த்து சொல்ல போறேன். உன்னுடைய காலேஜில் படிக்கும் மாணவன் என்னை ஒரே நாளில் வசீகரித்து விட்டான்னு!"

அவன் அவளைத் திரும்பி பார்த்தான்.

"என்ன பார்க்கிறே?"

"நாம ரெண்டு பேரும் தினமும் சந்திக்கணுமா வேண்டாமா?"

"சந்திக்கணும்!"

"நான் தினமும் உன்கூட போனில் பேசணுமா வேண்டாமா?"

"பேசணும்!"

"அப்படின்னா நம்ப காதல் விவகாரத்தை உன் ∴ப்ரெண்ட்கிட்டே நீ சொல்லக்கூடாது!"

"அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்!"

"நீ அவகிட்ட சொல்லப்போய் உன் ∴ப்ரெண்ட்டோட வாய் சும்மா இருக்காது. எல்லார்கிட்டேயும் சொல்லிக்கிட்டு திரிவா. அப்புறம் நியூஸ் காலேஜ் பூராவும் பரவி கடைசியில எங்கம்மா அப்பாவிற்கு தெரிஞ்சிடும்!"

"அவள் அப்படியெல்லாம் கிடையாது. சீக்ரெட்டா வெச்சுப்பா!"

"என் பேச்சை கேட்கமாட்டியா? நான்தான் சொல்ல வேண்டாம்ன்னு சொல்லிக்கிட்டிருக்கேன், திருப்பி திருப்பி சொன்னதையே சொல்லிக்கிட்டிருக்கே!" உரிமையும் அதிகாரமும் கலந்த குரலில் சொன்னான்.

"சரிப்பா என்னோட ∴ப்ரெண்ட்கிட்டே நம்ப காதல் விவகாரத்தை பத்தி பேசலை. போதுமா! இதுக்கு மட்டும் பதில் சொல்லு?"

"என்னது?"

"என்னோட செல் நம்பர் உனக்கெப்படி கிடைச்சது?"

"இன்னொரு நாள் சொல்றேன்!" எனக்கு இப்போ டைம் ஆகுது. நான் கிளம்பறேன்!"

"இவ்வளவு சீக்கிரம் வீட்டுக்குப் போய் என்ன பண்ணுவே?"

"டி.வி.டி.யில் ஹாலிவுட் மூவிஸ் பார்ப்பேன். பை ஆராதானா ஸி யு டுமாரோ!"

அவசர அவசரமாக அவளிடம் விடைபெற்றுக் கொண்டு பார்க்கை விட்டு வெளியே வந்தான். மரத்தின் கீழ் நிறுத்தியிருந்த பல்சரை ஒரு உதை உதைத்து கிளம்பினான். அவன் பைக் தெருமுனையை கடக்கும் வரை பார்க்கின் வாசலிலேயே நின்று பார்த்தாள் ஆராதனா.

மேரி கல்லூரிக்கு சற்று தொலைவில் இருந்தது அந்த சிறிய பூங்கா. திறந்த புல்வெளியுடன் செடி, கொடிகள் வளர்ந்திருந்தன. புல் தரை கொஞ்சம் செம்பட்டை நிறத்தில் இருந்தது. பார்க்கின் வெளியே பைக்கை ஸ்டாண்டிற்கு நிறுத்தி லாக் செய்துவிட்டு உள்ளே போனான். புல் தரையில் மெல்ல நடை போட்டுக் கொண்டு ஆள் காட்டி விரலில் சாவியை சுழற்றிக் கொண்டு நாலா பக்கமும் பார்வையை வீசினான்.

அனிஷா வேப்ப மரத்தின் அடியில் சோகம் அப்பிய முகத்தோடு அமர்ந்திருந்தாள். அந்நேரம் அகஸ்டினின் செல்போனில் மெஸேஜ் டோன் சப்தம் கேட்டது. பேண்ட் பாக்கெட்டில் இருந்த செல்போனை எடுத்து மெஸேஜை பார்த்தான். ஆராதனா மெஸேஜ் பண்ணியிருந்தாள்.

அவள் அனுப்பின மெஸேஜை படித்துக் கொண்டு நிதானமாக அனிஷாவை நோக்கி வந்து கொண்டிருந்தான். அனிஷா கோபமாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அகஸ்டின் அவளருகில் அமரும்போது ஆராதனாவின் மெஸேஜை டெலிட் பண்ணிவிட்டு அமர்ந்தான்.

அனிஷாவின் முகத்தை மெல்லமாக திருப்பினான் அகஸ்டின்.

"கோபமாடா? என்கிட்டே பேசமாட்டியா?" அனிஷா அமைதியாயிருந்தாள்.

"என்கிட்டே பேசு அனி. நீ பேசாட்டி எனக்கு பைத்தியமே பிடிச்சிடும். என்மேல் கோபமென்றால் நாலு அடிகூட அடிச்சிடு. ஆனா இப்படி பேசாமல் மட்டும் இருக்காதே!" அனிஷம் இனம் இளகி அவனது முகத்தை ஏறிட்டாள்.

"ஏன் லேட்?"

"நீ மட்டும் நேத்து என்னை கோயிலில் காக்க வெச்சே. எனக்காக நீ காத்துகிட்டிருக்க மாட்டியா?"

"அஞ்சு நிமிஷமாவது பத்து நிமிஷமா முக்கால் மணி நேரமாக இதோ வந்துடுவே, அதோ வந்துடுவேன்னு காத்துக்கிட்டிருக்கேன். காலேஜிலும் இன்னிக்கு பூரா பார்க்க முடியலை. எங்கே உன்னை பார்க்க முடியாமல் போயிடுமோ உன்கிட்ட பேசமுடியாமல் போய்விடுமோனு தவிச்சு போயிட்டேன்!"

கண்கள் பனிக்க சொன்னாள்.

"இதுக்குப் போய் ஏண்டா அழறே?"

"அகஸ்டின் ஐ லவ் யூ ஸோ மச். உன்னை பார்க்காமல் உன்கூட பேசாமல் என்னால் இருக்க முடியாதுப்பா.

என்னை இதுமாதிரி தவிக்க விட்டுடாதே!"

அகஸ்டின் அவளை மென்மையாக அணைத்துக் கொண்டான்.

"நான் இருக்கும்வரை உன் கண்களில் இருந்து ஒரு சொட்டு

கண்ணீர்கூட வரக்கூடாது. நான் உன்னை விட்டுப் போகமாட்டேன். லவ் யூ டா செல்லம்!"என்றான் காதல் ஒழுக. ஐ லவ் யூடா செல்லம் என்ற அதே வார்த்தையை அவன் செல்போனில் டைப் செய்து ஆராதனாவிற்கும் மெஸேஜ் அனுப்பினான்.

"டைம் ஆச்சு கிளம்பலாமா?" எனக் கேட்டான் அகஸ்டின்.

"நீ பைக் ஓட்டற ஸ்டைலை பார்த்தபிறகுதான் நான் கிளம்புவேன்!" என்றாள் குழந்தைத்தனமாக.

"ஓ யெஸ்!"

இருவரும் பூங்காவை விட்டு வெளியே வந்தார்கள். அகஸ்டின் பைக்கில் ஏறி உதைத்தான். தலையை திருப்பி அனிஷாவைப் பார்த்தான்.

"வரட்டா!"

"ம்"

புழுதியை கிளப்பிக் கொண்டு பைக்கை ஸ்பீடாக ஓட்டி சென்றான். அவன் தலை மறையும் வரை ஆசையாக நின்று பார்த்தாள் அனிஷா. அவள் ஸ்கூட்டியை எடுப்பதற்காக வந்தாள். ஸ்கூட்டியின் அருகே ஒருவன் நின்று கொண்டிருந்தான். அவனைப் பார்த்த அனிஷா ஒரு கணம் திகைத்துப் போனாள் அவளையறியாமல், "ஏய் கணேஷ் எப்போ வந்தே?" என்று கேட்டாள்.

கணேஷ் முகத்தில் உற்சாகத்தை தொலைத்திருந்தான்.

"ஸாரி அனிஷா! சேட்டுவும் கந்துவட்டிக்காரர்களும் என்னை ரொம்ப நெருக்கினாங்க. என் கையில வேற பணம் இல்லை. அவனுங்க கொடுத்த டார்ச்சர் தாங்கமுடியாமல் தலைமறைவாகிட்டேன். திரும்பவும் நம்ப காலேஜில் பார்ப்பதற்கு அசிங்கமாக இருந்தது. அதனால இப்போ கரஸில் படிச்சிக்கிட்டிருக்கேன். உன்கிட்டே எப்படியாவது ஸாரி கேட்கணும்னு இரண்டு நாளா தேடிகிட்டிருந்தேன். ஐயம் ரியலி ஸாரி அனிஷா!"

"நீ பண்ணின காரியத்தால் நான் பெரிய ஆபத்தில் மாட்டியிருந்திருப்பேன். நல்லவேளை அகஸ்டின் வந்து எனக்கு உதவினான். இல்லேன்னா என் பெயர் கெட்டு போய் இருந்திருக்கும்!" "அகஸ்டினோட பணத்தை எப்படியாவது கொஞ்சங் கொஞ்சமாக திருப்பி தந்துடறேன்னு அவன்கிட்ட சொல்லு!"

"அகஸ்டின் பெரிய பணக்காரன். இந்த பத்தாயிரம் ரூபாய் எல்லாம் அவனுக்கு பத்து ரூபாய் மாதிரி. பணத்தை நீ திருப்பி கொடுக்கணும்னு அவன் எதிர்பார்க்கிற மாதிரி தெரியலை!"

"உன்னையும் அவனையும் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி

சேர்த்து பார்த்தேன். நீ அவனை காதலிக்கிறியா அனிஷா?"

"நாங்க இரண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் உயிருக்கு உயிராக காதலிக்கிறோம். அவன் என்னோட உயிர் மூச்சு. அவன் இல்லாத வாழ்க்கையை என்னால நினைச்சுகூட பார்க்க முடியாது!"

கணேஷ் மௌனமாக அவளையே பார்த்தான். பின் தயங்கியபடி சொன்னான்.

"நான் சொல்கிறேன்னு தப்பாக நினைக்காதே அனிஷா. நீ நினைக்கிற மாதிரி அகஸ்டின் அந்தளவிற்கு நல்லவனில்லை. எதற்கும் அவனை பத்தி நல்லா தெரிஞ்சுக்கிட்டு அவன்கிட்டே பழகு. அவன்கிட்டே கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இரு!"

அவன் சொன்னதை கேட்டு அனிஷாவின் முகமும் கண்களும் தகதகத்தது.

"ஊருக்கு வந்த திருடி மத்தவங்களையும் திருடினு நினைக்குமாம். உன்னை மாதிரியே அவனையும் நினைக்காதே. ஹி இஸ் எ ஜெம்! என்னோட அகஸ்டினை ஜட்ஜ் பண்ணுவதற்கு உனக்கு கால் அளவு தகுதிகூட கிடையாது. உன்னையெல்லாம் ஜென்மத்துக்கும் திருத்த முடியாது!"

விறுவிறுவென ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு கிளம்பினாள். கணேஷ் அவள் செல்வதையே கவலையாக பார்த்தான்.

9

பல உயரமான கான்கிரீட் கட்டிடங்களுக்கு நடுவே அனிஷாவின் வீடு இருந்தது. எல் வடிவமான அந்த வீட்டைச் சுற்றி சுற்றுச்சுவர் இருந்தது. அதன் மேல் எச்சமிட்டு வெண்மையாகத் தெரிந்தது.

மல்லிகைக் கொடி வரந்தாவில் இருந்த ஒரு மூங்கிலின் மேல் படர்ந்திருந்தது. மல்லிகைக் கொடியைப் பார்ப்பதே இக்காலத்தில் அரிது. சீசன் இல்லாததால் அதில் பூ இல்லை. அதன் இலைகள் பூச்சியால் அரிக்கப்பட்டிருந்தன. மேல்பாகம் முழுமையும் அழுக்காக இருந்தது. வெகு தூரத்தில் இருந்து பார்த்தில் கூட அதன் பரிதாப நிலை தெரிந்தது. அவர்கள் வீட்டின் முன்பு பெயர் பலகை கிடையாது என்ன பெயர் கொண்டு அழைக்க முடியும்? முன்புறம் உள்ள மல்லிகைப் பந்தலை கருத்தில் கொண்டு மல்லிகைப் பந்தல் என்றுதான் அழைப்பார்கள். இப்போதெல்லாம் அனிஷாவிற்கு

அகஸ்டினிடமிருந்து மெஸேஜ் வருவது சுத்தமாய் நின்று போயிருந்தது. முன்பெல்லாம் அவள் கல்லூரிக்கு கிளம்பும் நேரம் குறைந்தது முப்பது மெஸேஜ்களாவது வரும். அது மட்டுமில்லாமல் விடாது கால் பண்ணி பேசிக்கொண்டே இருப்பான். என்ன கலர் பொட்டு வெச்சிருக்கே!...

என்ன கலர் வளையல் போட்டிருக்கே! என்ன கலர் சுடிதாரில் இன்னிக்கு காலேஜ்க்கு வருவே. நானும் அதே கலர் பேண்ட் ஷர்ட் அணிந்து கொண்டு வருகிறேன். இது போன்ற காதல் உணர்வுகளை சுவையாக பகிர்ந்து கொள்வார்கள். அனிஷா அவன் எது சொன்னாலும் மறுப்பு தெரிவிக்காமல் அவன் சொல்கிறபடி நடந்து கொள்வாள். அவன் சொல்கிற கலரில்தான் உடை அணிவாள். அவன் சொல்கிற டிசைனில்தான் வளையல், செயின், கம்மல், பொட்டு எல்லாம் வைத்துக் கொள்வாள். அவனுக்கு பிடிச்ச மாதிரிதான் தலைவாரிக் கொள்வாள். அவன் சொல்கிற டைமிற்குதான் வீட்டை விட்டு கல்லூரிக்கு கிளம்பி வருவாள்.

ஆராதனாவிடம் அவன் பழக ஆரம்பித்த பிறகு இதுமாதிரி விஷயங்கள் எல்லாம் சுத்தமாய் நின்று போனது.

அகஸ்டின் மீது கூடுதல் ஏக்கம் வந்தது. அவனிடமிருந்து ஒரு மெஸேஜாவது வந்து இருக்கிறதா என்று ஏமாற்றம் கண்களில் பூத்தது. அந்நேரம் மெஸேஜ் டோனின் பீப் சப்தம் கேட்டது. ஆர்வமாக என்ன மெஸேஜ் என்று பார்த்தாள். ஆராதனா அவளுக்கு மார்னிங் மெஸேஜ் அனுப்பியிருந்தாள்.

'அடச்சீ நீதானா' என்ற சலித்துக் கொண்டாள். அடுத்ததாக ஒரு மெஸேஜ் வந்தது. 'கால் மி' என்று அகஸ்டின் மெஸேஜ் பண்ணியிருந்தான். அவன் மெஸேஜைக் கண்டதும் மனசுக்குள் பொங்கிய பூரிப்போடு அவனுக்கு போன் பண்ணினாள். ரிங் அடித்துக் கொண்டே இருந்தது. அவளோட கால் கட்டாகும் அரை நொடிக்கு முன்பு எடுத்துப் பேசினான்.

"உன்கிட்டே இருந்து ஒரு மெஸேஜாவது வந்துவிடாதான்னு ஏக்கத்தில் இருந்தேன். உன்னோட மெஸேஜை பார்த்ததும் எவ்வளவு சந்தோஷப்பட்டேன் தெரியுமா?"

"அப்படி என்ன பெரிசா மெஸேஜ் பண்ணியிருந்தேன். கால் மீ என்றுதானே அனுப்பியிருந்தேன்!"

"எனக்கு அது பெரிய விஷயம். அதை நான் டெலிட் பண்ணவே மாட்டேன். பத்திரமாக வெச்சுப்பேன்!"

"இன்னிக்கு சந்திக்கலாமா?" அனிஷா குதூகலமானாள். பின்பு கவலையுடன் கேட்டாள்.

"இன்னிக்கு சண்டேயா எப்படி வீட்டை விட்டு வெளியே வர்றது அகஸ்டின்?"

"இன்னிக்கு உன்னை பார்க்கலாம்னு ஆசையா இருந்தேன். நீ வரலைன்னா என்னோட ஃப்ரெண்ட் ஒருத்தன் ரொம்ப நாளா என்னை சினிமாவுக்கு கூப்பிட்டுகிட்டிருந்தான். சரி நான் அவனது சினிமாவிற்கு போய்கிறேன்!"

"அப்போ என்னை பார்க்க வரமாட்டியா?" கெஞ்சலாக கேட்டாள்.

"நீதான் வரமாட்டேங்கிறே!" அனிஷா சில நொடிகள் யோசித்தாள்.

"ஆங், ஐடியா கிடைச்சாச்சு. என்னோட ஃப்ரெண்டு ஆராதனா வீட்டிற்கு போயிட்டு வர்றேன்னு அம்மாகிட்டே சொல்லிட்டு கிளம்பி வர்றேன். எங்கே சந்திக்க போகிறோம் கோவிலா? பார்க்கா?"

"பார்க்கும் இல்லை, கோவிலும் இல்லை!"

"அப்புறம்?" மறுமனையில் அகஸ்டின் மௌனமா இருந்தான்.

"அகஸ்டின்!" கண்களில் மயக்கத்தோடு அழைத்தாள் அனிஷா.

"அனிஷா செகண்ட் கால் ஒண்ணு வருது. ஒரு நிமிஷம் லைனில் இரு. பேசிட்டு வந்துடறேன்!" என்று அனிஷாவின் காலை ஹோல்டில் போட்டான்.

"ஹாய் டியர்!" என்றான்.

"ஹாய் ஷ்யாம்!" என்று மறுமுனையில் ஆராதனாவின் குரல் தேனாய் வழிந்தது.

"யார்கிட்டே பேசிகிட்டிருந்தே கால் வெயிட்டிங்கில் போச்சே?" என்று அவள் கேட்டாள்.

"ப்ரெண்ட்கிட்டே பேசிகிட்டிருந்தேன்!"

"பாய் ஃப்ரெண்ட்டா கேர்ள் ஃப்ரெண்டா?"

"எனக்கு இருக்கிற ஒரே கேர்ள் ஃப்ரெண்ட் நீதான். நீ மட்டும்தான். வர்றீயா இன்னிக்கு சினிமாவுக்கு போய்ட்டு வரலாம்?"

"சினிமாவுக்கா வர்றேனே!" உற்சாகமாய் சொன்னாள். அடிப்பாவி! கூப்பிட்டவுடன் சரின்னுட்டாளே. மனதுக்குள் அவளைப் பற்றி ஏளனமாக நினைத்தான்.

"ஆராதனா! இன்னிக்கு சண்டேயாச்சே! எப்படி வெளியே வருவே?"

"ரொம்ப சிம்பிள்! அனிஷா வீட்டுக்கு போயிட்டு வர்றேன்னு

சொன்னால் போதும். என் வீட்டில் விட்டுடுவாங்க. என்ன படத்துக்கு போறோம் ஷ்யாம்?"

அனிஷாவின் கால் தொடர்ந்து ஹோல்டிலேயே இருந்து கட்டாகி போனது. அனிஷா மீண்டும் அவன் நம்பருக்கு டிரை பண்ணினாள். லைன் கிடைக்கவில்லை. மறுபடியும் மறுபடியும் போட்டுப் பார்த்தாள். லைன் கிடைக்கவேயில்லை. அப்புறம்தான் கவனித்தாள். பேலன்ஸ் தீர்ந்து போயிருந்தது. தவித்துப் போனாள். இப்போ அகஸ்டினிடம் எப்படி பேசுவது?

சமையலறையில் சமைத்துக் கொண்டிருந்த காயத்ரியிடம் வந்தாள்.

"அம்மா என்னோட செல்போனில் பேலன்ஸ் தீர்ந்து போச்சு. ஒரு பி.ப்டி ரூபிஸ் தாங்க!" என்றாள்.

காயத்ரி காதில் வாங்காதவள் போல் தொடர்ந்து சமைத்துக் கொண்டிருந்தாள்.

"அம்மா, உங்களைத்தான் கேட்கிறேன். ஒரு அம்பது ரூபாய் வேணும். டாப் அப் பண்ணணும்!" காயத்ரி பட்டென அவளை திரும்பி பார்த்தாள்.

"நீ வாங்குற மதிப்பெண்களுக்கு உனக்கு [illegible] வாங்கி கொடுத்ததே தப்பு. அதுக்கு டாப் அப் போடறதுக்கு அம்பது ரூபாய் வேற வேணுமா? தரமுடியாது. போடீ!"

"ம்மா ம்மா ப்ளீஸ்ம்மா. இந்த ஒரு வாட்டிமட்டும் தாங்க. அடுத்தவாட்டி எல்லா பாடத்திலேயும் நல்ல மார்க் வாங்கி காண்பிக்கிறேன்."

"ஒவ்வொருவாட்டியும் இப்படியே சொல்லு. நீ இன்னும் தேரவே இல்லை அனிஷா!"

"பொம்பளை பிள்ளை நான் படிச்சு என்னம்மா பண்ண போறேன்!"

"வாயை மூடுடி. சாய்னா நெக்வால், சானியா மிர்சாவெல்லாம் சாதனை மேலே சாதனை பண்ணி பெண் இனத்துக்கே பெருமை சேர்க்கிறாங்க. உனக்குதான் படிப்புனாலே கசப்பாயிருக்கு!"

"சரி, சரி போரடிக்காதீங்க. பைசாவை எடுங்க!"

காயத்ரி முணுமுணுத்தவாறு ஒரு அம்பது ரூபாய் தாளை பீரோவில் இருந்து எடுத்து அவளிடம் கொடுத்தாள்.

பணத்தை வாங்கிக் கொண்டு பக்கத்து தெருவில் இருந்த பிசிஓவிற்கு நடந்து சென்றாள். அங்கே அவளுடைய நம்பருக்கு டாப் அப் செய்து கொண்டாள். வீட்டிற்கு வந்ததும் அவளறைக்கு சென்று கதவை அடைத்துக் கொண்டாள். ரோஸ் நிற உதட்டை குவித்துக்

கொண்டு அகஸ்டினின் நம்பருக்கு தொடர்பு கொண்டாள். அவள் முகம் பீதி அடைந்தது. அவன் நம்பர் என்கேஜ்டாக இருந்தது.

'என்னுடைய கால் கட்டாகி குறைந்தது அரை மணி நேரமாவது இருக்கும்... அரை மணி நேரமாக அவன்யார்கிட்டே பேசி கிட்டியிருக்கான்' அவளது உடம்பு முழுவதும் பதற்றம் தொற்றிக் கொண்டது.

'இது மாதிரியெல்லாம் அவன் நடந்துக் கொண்டது கிடையாது. என்னுடைய நம்பரை பார்த்ததும் உடனே திருப்பிக் கூப்பிடுவான். திருப்பி கூப்பிட முயற்சிப்பது மாதிரி தெரியலை. இன்றைக்கு மீட் பண்ணலாம்னு சொன்னான். நடுவில் யார்கிட்டே இருந்து கால் வந்திருக்கும். என்னைவிட அந்த நபர் அவனுக்கு முக்கியமாகிவிட்டதோ?'

நினைக்கையில் அழுகை துருத்திக் கொண்டு வந்தது. கன்னங்களில் கண்ணீர் வழிந்தது. விடாமல் அவனது நம்பரை தட்டிக் கொண்டே இருந்தாள். அவனுடைய போன் தொடர்ந்து என்கேஜ்டாகவே இருந்தது.

'யார்? யார்? கூட இவ்வளவு நேரம் பேசறான்?' கவலை அதிகரித்தது. நெஞ்சம் அடைத்து இதயம் விம்மியது. அவன் திருப்பி கூப்பிடுவான் என்று நினைத்து சிறிது நேரம் காத்திருந்து பார்த்தாள். அவனிடமிருந்து போன் வரவில்லை. அவளே மீண்டும் அவனுக்கு போன் பண்ணி பார்த்தாள். இந்த முறையும் என்கேஜ்ட்டாக இருந்தால்? விரல் நகத்தை பதற்றமாய் கடித்தாள். இந்த முறை ரிங் அடித்தது.

மறுமுனையில் அகஸ்டின் "சொல்லுடா" என்றான் கூலாக. அனிஷா விசும்புவது அவனுக்கு கேட்டது.

"ஏண்டா அழறே?"

"ய... யார்கூட இவ்வளவு நேரம் பேசிகிட்டிருந்தே?"

"அ... அம்மா அம்மாகூட பேசிகிட்டிருந்தேன். அக்காவோட குழந்தைக்கு உடம்பு சரியில்லை. அம்மா கும்பகோணம் வரைக்கும் போயிருக்காங்க. அவங்ககிட்டே பேசிகிட்டிருந்தேன்."

அனிஷாவின் படபடப்பு முழுவதும் அடங்கி நிம்மதி பிறந்தது. "அம்மாகிட்டதான் பேசிகிட்டிருந்தியா. வேற ஏதோ பொண்ணுகிட்டதான் மணிக்கணக்கா பேசிகிட்டியிருந்தியோன்னு பயந்துட்டேன்!"

"ஒரு விஷயம் நல்லா புரிஞ்சுக்கோ அனிஷா. நான் காதலிக்கிற ஒரே பொண்ணு நீதான். உனக்கு மட்டும்தான் என் இதயத்தில் இடம் உண்டு!" அவன் சொன்னதை கேட்டு அவன் மீது ஆழமான நம்பிக்கை ஏற்பட்டது.

"இன்னிக்கு மீட் பண்ணலாம்னு சொன்னே!"

"பிரின்ஸ் தியேட்டர் பக்கத்துல தீபிகானு ஒரு ரெஸ்ட்டாரெண்ட் இருக்கிறது. நாம இரண்டு பேரும் இன்னிக்கு அங்கே லஞ்ச் சாப்பிடலாமா?"

"நீ எத்தனை மணிக்கு அங்கே வருவே?"

"ஒன்றரைக்கு!"

"மணி இப்போ பன்னிரெண்டாகுது. நான் ஒரு ஒண்ணோ க்ளாக் கிளம்பி வரட்டுமா?" என்று கேட்டாள் அனிஷா.

"சீக்கிரம் வந்துடு! என்னால பசி தாங்க முடியாது!" என்றான் அகஸ்டின்.

10

பிரின்ஸ் தியேட்டரில் கும்பல் இருந்தாலும் அகஸ்டினுக்கு டிக்கெட் கிடைத்தது. இரண்டு டிக்கெட் வாங்கி கொண்டான். ஒன்று அவனுக்கு, மற்றொன்று ஆராதனாவிற்கு. மத்தியானம் இரண்டு மணி ஷோ. ஆராதனா இன்னும் வராமல் இருந்தாள். அகஸ்டின் அவளுக்காக காத்துக் கொண்டிருந்தான். படம் ஆரம்பிக்கும் நேரம் பார்த்து ஆராதனா அங்கு வந்தாள். அகஸ்டின் எரிச்சலுடன் கேட்டான் "ஏண்டி லேட்?"

"சீக்கிரமாக வந்து நீ எப்போ வருவேன்னு பதைபதைப்போடு காத்துக்கிட்டிருப்பது எல்லாம் எனக்குப் பிடிக்காது!" என்று அவளிடம் இருந்து பதில் வந்தது. அகஸ்டின் அவளைப் பார்த்தான். ஆராதனா விவரமானவள்.அவகிட்டே ஜாக்கிரதையாக இருக்கணும். ஆனால் அனிஷா அப்படி கிடையாது. வெகுளித்தனமுடையவள்.

அகஸ்டினுக்காக எதை வேண்டுமானாலும் செய்வதற்கு தயாராக நிற்பவள். அந்த அளவிற்கு அவனது சொல்லிற்கு ஏற்ப இசைவதற்கு அவளை நன்கு வசியம் பண்ணி வைத்திருந்தான். தியேட்டரில் கடைசி வரிசையில் அகஸ்டினும் ஆராதனாவும் அமர்ந்து கொண்டார்கள். முதல் காரியமாக அகஸ்டின் அவனது செல்போனை எடுத்து சைலண்ட் மோடில் போட்டான். ஆராதனா அவள் ஹேண்ட் பேக்கை திறந்தாள். அதிலிருந்து கிப்ட் பேப்பர் சுற்றிய நீளமான பெட்டியை அவனிடம் கொடுத்தாள்.

"என்னது ஆராதனா இது?"

"திறந்து பாரு. உனக்காக என்னோட சின்ன கி.ப்ட்!"

அகஸ்டின் கி.ப்ட் பேப்பரை பிரித்து அட்டை பெட்டியை திறந்து பார்த்தான். உள்ளே புத்தம் புதிய டைட்டன் வாட்ச் இருந்தது. அது ரேடியம் வைத்த வாட்ச். ஆராதனா அந்த வாட்சை வாங்கி அவன் இடது மணிகட்டில் கட்டிவிட்டாள். அகஸ்டின் அவளை பார்த்து புன்னகைத்தான்.

"நல்லா இருக்கு ஆராதனா!" என்றான். நல்ல காட்சிகளில் கைதட்டல்களும் விசில்களும் தூள் பறந்தன.

ஆராதனாவை சரியாக படம் பார்க்கவிடாமல் அகஸ்டின் சீண்டிக் கொண்டே இருந்தான். இதுமாதிரி நடந்து கொண்டால் நான் கிளம்பி விடுவேன் என்று அவன் கண்டிப்பாக சொன்ன பிறகு அமைதியாக உட்கார்ந்து படத்தை பார்த்தான். இடைவேளையின்போது ஆராதனா அவளுடைய செல்போனை அவனிடம் கொடுத்துவிட்டு பாத்ரூமிற்கு எழுந்து சென்றாள். அவள் சென்ற பிறகு அவன் பேண்ட் பாக்கெட்டிலிருந்த செல்போனை எடுத்து பார்த்தான். ஐம்பது மிஸ்டு கால்ஸ் இருந்தன. அனைத்தும் அனிஷாவிடமிருந்துதான். அகஸ்டின் உள்ளுக்குள் விஷமமாய் சிரித்துக் கொண்டான். செல்போனை மீண்டும் அவன் பேண்ட் பாக்கெட்டில் போட்டு கொண்டான். அப்போது ஆராதனாவின் செல்பேபன் சிணுங்கியது. அகஸ்டின் தரையில் ப்ளாஷான நம்பரை பார்த்து அகஸ்டின் அதிர்ந்து போனான்.

அனிஷாவிடமிருந்து கால் வந்தது. ரிங் அடித்து¢கொண்டே இருந்தது. அகஸ்டின் அமைதியாக திரையை பார்த்துக் கொண்டிருந்தான். பாத்ரூம் போயிட்டு வந்த ஆராதனா அவளோட மொபைலை வாங்கி¢க் கொண்டாள். அனிஷாவிடமிருந்து ஒரு மிஸ்டு கால் வந்திருப்பதை பார்த்தாள்.

"ஏய்... அறிவில்லை. என்னோட ப்ரெண்ட் அனிஷா போன் பண்ணியிருக்காள். எடுத்து பேசியிருக்க வேண்டியதுதானே!"

"நான் எடுத்து பேசியிருந்தால் நம்ப காதல் விவகாரம் அவளுக்கு தெரிஞ்சு போகும். அதான் அப்படியே விட்டுட்டேன்!" அனிஷாவிடமிருந்து மீண்டும் அவளுக்கு கால் வந்தது. ஆராதனா பச்சை நிற பட்டனை அழுத்த முயன்றாள். அகஸ்டின் அவளைத் தடுத்தான்.

"இப்போ, நீ பேசினால் எங்கே இருக்கே, என்ன பண்ணிகிட்டிருக்கேனு ஏதாவது கேப்பா. பேசாமல் வீட்டுக்கு போனதுக்கப்புறம் அவகிட்ட பேசிக்கோ!"

"நம்ப காதல் விஷயத்தை எத்தன நாளைக்குத்தான் முடி மறைக்கிறது

ஷ்யாம்!"

"நான் சொல்கிற வரைக்கு யார்கிட்டேயும் சொல்லாதே!" அகஸ்டின் அவளுக்கு ஐஸ்க்ரீம், பாப் கார்ன் எல்லாம் வாங்கிக் கொடுத்தான். படம் முடிவடைந்ததும் இருவரும் தியேட்டரை விட்டு வெளியே வந்தார்கள். தியேட்டரின் அருகில் இருந்த தீபிகா ரெஸ்ட்டாரெண்ட் அவள் கண்ணில் பட்டது.

"ஷ்யாம் அந்த ரெஸ்ட்டாரெண்டிற்கு போய் ஏதாவது சாப்பிட்டு விட்டு வரலாமா?"

"இன்னொரு நாள் கூட்டிட்டு போறேன். இப்போ என் கையில் பைசா இல்லை!"

"இப்போ நீ எங்கே போகப் போறே?"

"நேரா என் வீட்டுக்குதான். அதில் என்ன சந்தேகம்? தலை வலிக்குது. என் வீட்டுக்கு வந்து தலையை பிடிச்சு விடறீயா?"

"ஆசையை பாரு! வீட்டுக்குப் போய் படிக்கணும் நினைச்சாலே வெறுப்பா இருக்கு ஷ்யாம்!"

"என்ன படிக்க போறே?"

"மேக்ஸ்தான்!"

"நான் என்னோட நோட் தர்றேன். கொஞ்சம் உபயோகமா இருக்கும்!"

"ஓகெ ஷ்யாம் பை!"

ஆராதனாவின் தலை மறைந்ததும் அவனது பைக்கை தீபிகா ரெஸ்ட்டாரெண்டின் முன்பு நிறுத்தினான். ரெஸ்ட்டாரெண்ட்டை சற்று தள்ளி ஒரு பெண் கலர் கலரான ரோஜா பூக்களை கூடையில் போட்டு விற்றுக் கொண்டிருந்தாள். அந்த பெண்ணிடம் ரூபாய் கொடுத்து ஆரஞ்சு நிற ரோஜாப்பூவும், சிவப்பு நிற ரோஜாப் பூவும் வாங்கிகொண்டான். ரோஜாப் பூக்களுடன் ரெஸ்ட்டாரண்டிற்குள் நுழைந்தான். ஏ.ஸி.யின் குளுமை உடல் முழுவதும் பரவியது. கடைசி மேஜையில் அனிஷா தேமே என்று உட்கார்ந்திருந்தாள். அவ்வளவு நேரமாகியும் அவளுக்கு எழுந்து போக மனம் இல்லை. அகஸ்டினை இன்று பார்த்துவிட்டுதான் போகவேண்டும் என்ற பிடிவாதத்துடன் அமர்ந்திருந்தாள். போடப்பட்டிருந்த கண்ணாடி கிளாஸின் வழியாக அப்பாவியாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அகஸ்டின் அவள் முன்பு போய் அமர்ந்தான். "ஐயம் வெரி வெரி வெரி ஸாரிடா!" என்று கூறிவிட்டு இரண்டு ரோஜாப் பூக்களையும் அவளிடம் கொடுத்தான். அனிஷா அமைதியாக ரோஜாப் பூவை வாங்கிக் கொண்டாள். மனதில் ஓரத்தில் ஒரு சின்ன சந்தோஷம் துளிர்த்தது.

"நீ சொன்ன மாதிரி ஒன்றரைக்கெல்லாம் இங்கே வந்துட்டேன். மணி இப்போ அஞ்சாகப் போகுது. என்னோட லவ்வருக்காக வெயிட் பண்ணிகிட்டிருக்கேன் வெயிட்டர்கிட்டே சொன்னேன். அதற்கப்புறம் அவனும் தொந்தரவு கொடுக்கலை. ஏன் இவ்வளவு லேட்?"

"போன்ல உன்கிட்டே பேசினதுக்கப்புறம் லேசா கண் அசந்து தூங்கிட்டேன். முழிச்சுப் பார்த்தா மணி இரண்டு அய்யா என் செல்லக்குட்டி எனக்காக காத்துக்கிட்ருப்பாளேன்னு அடிச்சு புடிச்சு எழுந்து ரெடியாக பைக்கை வேகமாக ஓட்டிகிட்டு வந்தால் ஒரு கார் மேலே மோதிட்டேன்!"

"அச்சச்சோ அப்புறம்?"

"பயப்படாதேடா எனக்கு ஒண்ணும் ஆகலை. தப்பு என் மேல கிடையாது. கார்காரன் ராங் ரூட்டில் வந்ததால்தாக் ஆக்ஸிடெண்ட். என்னோட பைக்கில் சின்ன ஸ்கிராட்ச் ஆயிடுச்சு. அப்புறம் கார்காரனை மெக்கானிக் ஷெட்டிற்கு இழுதுட்டு போய் ஸ்கிராட்சை சரி பண்ண எவ்வளவு ஆகும்ணு கேட்டு அதற்குரிய இரண்டாயிரம் ரூபாய் பணத்தை அவன்கிட்ட இருந்து வசூலித்துவிட்டு வர்றதுக்குத்தான் இவ்வளவு லேட்டாயிடுச்சு. இவ்வளவு நேரம் எப்படி பொறுமையாகாத்துகிட்டிருந்தேடா?"

"நீ எனக்கு அனுப்பின மெஸேஜை எல்லாம் பார்த்துக்கிட்டிருந்தேன். டைம் போனதே தெரியலை. நடுவுல பெண் ஃப்ரெண்ட் ஆராதனாகிட்டே பேசலாம்னு நினைச்ச அவளுக்கு போன் பண்ணினேன். கழுதை போனையே எடுக்கலை. திருப்பி கூப்பிடவும் இல்லை!"

"சரி விடு. சிக்கன் பிரியாணி சாப்பிடறீயா, சிக்கன் ஃபிரைடு ரைஸ் சாப்பிடறீயா?"

"மணி இப்போ என்னாகுது தெரியும்ல. ஒரே ஒரு மில்க் ஷேக் மட்டும் போதும்!" என்றாள். அகஸ்டின் வெயிட்டரை அழைத்து அவளுக்கு பிடிச்ச சிக்கன் பிரியாணி வாங்கிக் கொடுத்தான். அவனுக்கு பரோட்டாவும் மட்டன் குழம்பும் வாங்கிக் கொண்டான்! சிக்கன் பிரியாணியை ஸ்பூனால் எடுத்து அனிஷாவிற்கு ஊட்டி விட்டான் அகஸ்டின். அனிஷா மிகுந்த மகிழ்ச்சியுடன் சாப்பிட்டாள்.

11

அடுத்த ஏழு நாட்கள் அகஸ்டின் அனிஷாவிடம் பேசமாலிருந்தான். அனிஷா துடித்துப் போனாள். கல்லூரியிலும் அவனை பார்க்க முடியவில்லை. அவன் செல்போனுக்கு டிரை பண்ணினாள். ஸ்விட்சுடு ஆ.ப் என்று வந்தது.

அன்று அகஸ்டின் ஆராதனாவை அழகு நிலையத்திற்கு அழைத்து சென்றான். ஆராதானாதான் கேட்டிருந்தாள். அதன்பின் இருவரும் ஐஸ்க்ரீம் பார்லருக்கு சென்று வெண்ணிலா ஐஸ்க்ரீம் சாப்பிட்டார்கள். இரண்டாவது ஸ்பூனை எடுத்து வாயில் வைக்க போனவள் அகஸ்டினின் இடது கரத்தை பார்த்தாள். இறுக்கமான முகத்துடன் அவனிடம் கேட்டாள்.

"நான் உனக்கு ப்ரெசண்ட் பண்ணின ரேடியம் வைத்த வாட்ச் எங்கே ஷ்யாம்?"

அகஸ்டின் அவன் கரத்தையே பார்த்தான். அவனுக்கு ஒரு கணம் புரியவில்லை ஆராதனா கொடுத்த வாட்ச் எங்கே என்று.

"குளிக்கும்போது கழற்றினேன். அப்புறம் அப்படியே மறந்துட்டேன்!" என்று சமாளித்தான். உண்மையிலேயே அவள் கொடுத்த வட்ச் எங்கே போனது என்று அவனுக்கு தெரியவில்லை.

"என்னை பார்க்க வரும்போது நான் கொடுத்த வாட்சைத்தான் கட்டிட்டு வரணும்! ஓகேவா?"

"ஓ.கே. ஓ.கே இந்தா என்னோட மேக்ஸ் நோட். டபுட்டெல்லாம் பார்த்துட்டு சீக்கிரம் திருப்பி கொடுத்துடு!" ஆராதனா அவன் கொடுத்த நோட்டை வாங்கிக் கொண்டாள். அவனுடன் ஜாலியாக கொஞ்ச நேரம் அரட்டை அடிச்சுட்டு வீட்டிற்கு வந்தாள் ஆராதனா. அனிஷா அவள் வீட்டில் அமர்ந்திருப்பதை கண்டு உற்சாகமானாள்.

"ஹாய் அனி. இப்போதான் என் வீட்டிற்கு வருவதற்கு வழி தெரிஞ்சதா?" சுற்றும் முற்றும் பார்த்தாள்.
"எங்கம்மா இல்லை"

"ஆன்ட்டி நான் வந்த கொஞ்ச நேரத்துலேயே கிளம்பி கடைக்கு போயிட்டாங்க!"

"ரொம்ப நாளைக்கு பிறகு பொண்ணோட தோழி வந்திருக்காளே அவளுக்கு ஒரு கப் காபி போட்டுத் தந்துட்டு போகணும்னு எங்கம்மாவிற்கு தெரியாது!"

"ஆன்ட்டி கேட்டாங்க ஆராதனா. நான்தான் வேண்டாம்னு சொல்லிட்டேன்!"

"நீ எதுவும் வேண்டாம்ன்னா நான் விட்டுருவேனா!" பிரிட்ஜ்ஜை திறந்து ரஸ்னா பாட்டிலை எடுத்தாள். கண்ணாடி டம்ளர் வழிய

ரஸ்னாவை ஊற்றி எடுத்து வந்தாள். அனிஷா வேண்டாம் என்று மறுத்துவிட்டாள். ஆராதனாவிற்கு சற்று ஆச்சரியமாக இருந்தது.

வழக்கமாக அனிஷா அவள் வீட்டிற்கு வந்தால் உரிமையா கேட்டு வாங்கிச் சாப்பிடுவாள். இதுதான் முதல் தடவை அனிஷா அவள் வீட்டில் எதுவும் சாப்பிட மறுப்பது.

"உடம்பு சரியில்லையா அனிஷா. முகம் வாட்டமாக இருக்கிறது!"

"மனசுதான் சரியில்லை... மனசே ரொம்ப கஷ்டமாயிருக்கு ஆராதனா. இந்த விஷயத்தை யார்கிட்ட சொல்லி ஆறுதல் தேடறதுனு தெரியலை!"

"என்ன பிரச்சினை? எதுவானாலும் என்கிட்டே சொல்லு. நான் யார்கிட்டேயும் சொல்லமாட்டேன்!"

"நான் ஒரு பையனை காதலிக்கிறேன் ஆராதனா. அவன் ஒரு வாரமா என்கிட்டே பேசவேயில்லை. ரொம்ப வேதனையாக இருக்கு!" ஆராதனா ஆச்சரியமாக வாயைப் பிளந்தாள். "அட்ரா சக்கை. யாரை காதலிக்கிறே? யார் அந்த அதிர்ஷ்டசாலி?" என்று கேட்டாள் ஆராதனா.

"நீ யாரை காதலிக்கிறே அதை முதலில் சொல்லு!" எனக் கேட்டாள் அனிஷா. ஆராதனா வியந்து போனாள்.

"உனக்கெப்படி தெரியும்?"

"உன்னுடைய செல்போன் எப்போதும் என்கேஜ்டாகவே இருக்கு. அடிக்கடி என்னை பார்க்கிறதுக்கு வருவே. இப்பவெல்லாம் எங்க வீட்டு பக்கம் வர்றதே இல்லை!" ஆராதனா மெலிதாக வெட்கப்பட்டாள்.

"சொல்லுடி உன் மனசை கொள்ளை கொண்ட மன்மதன் யாருடி?"

"எங்கள் காதல் விஷயத்தை அவன் யார்கிட்டேயும் சொல்லக்கூடாதுன்னு ஸ்டிரிடாக சொல்லியிருக்கான்!"

"என்னோட காதலனும்தான் என்கிட்ட சொல்லியிருந்தான். இப்படி தொடர்ந்து ஏழு நாட்களாக அவன் என்கூட பேசாமல் இருந்ததில்லை. மனசுக்குள்ளேயே இந்த விஷயம் வாட்டி எடுத்ததால் உன்கிட்டே பகிர்ந்து கொண்டால் ஆறுதலாக இருக்குமென்று கிளம்பி வந்தேன்!"

"உன்னோட காதலன் என்ன பண்றான்?" என ஆராதனா கேட்டாள்.

"எங்க காலேஜில்தான் பி.எஸ்.சி., மேக்ஸ் பைனல இயர் படிக்கிறான்!"

"அவன் பெயர்?"

"அகஸ்டின்!"

அந்நேரம் அனிஷாவின் செல்போன் சிணுங்கியது. மடி மீதிருந்த ஹேண்ட் பேக்கை அவசரமாக திறந்து உள்ளே சிணுங்கிக் கொண்டிருந்த செல்போனை வெளியே எடுத்தாள். அகஸ்டினின் பெயர் திரையில் ப்ளாஷாகியது. அனிஷாவின் முகம் மலர்ந்தது. பட்டென ஆன் செய்து,

"ஏய், ஏன் ஏழு நாட்களாக என்கிட்ட பேசவேயில்லை. காலேஜ் பக்கமும் ஆளை காணோம். நான் எப்படி தவிச்சுப் போயிட்டேன் தெரியுமா?"

"நான் ஒரு பிரச்சினையில் மாட்டிகிட்டிருக்கேன் அனி!" அனிஷாவின் முகம் கலவரமானது.

"என்னப்பா பிரச்சினை?"

"நேரில் வா சொல்றேன்!"

"எங்கே வரணும்?"

"உடனே கிளம்பி எங்க வீட்டுக்கு வா. உன் முகத்தை பார்த்தான்தான் எனக்கு கொஞ்சம் ஆறுதலாக இருக்கும். எனக்காக கொஞ்சம் வர்றீயாடா?"

"இதோ இப்ப வர்றேன்!"

"என்னாச்சு அனிஷா?" என்று ஆராதனா கேட்டாள்.

"அகஸ்டினுக்கு ஏதோ பிரச்சினையாம். என்னை உடனே கிளம்பி வரச் சொல்லியிருக்கான். அவனுக்காக கொஞ்சம் வேண்டிக்கோ ஆராதனா!"

"பயப்படாமல் போ!" படபடப்புடன் எழுந்தாள் அனிஷா. அவள் மடிமீது வைத்திருந்த ஹேண்ட் பேக் இடறி கீழே சிதறின. வேகவேகமாக அனைத்தையும் பொறுக்கி எடுத்து ஹேண்ட் பேக்கில் போட்டுக் கொண்டு ஆராதனாவிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினாள். அவள் சென்ற பிறகு ஆராதனா தோள்களை குலுக்கிக் கொண்டாள். காதலனை நினைத்து இந்தளவிற்கு உருகுகிறாள். அவன் நினைவாகவே மயங்குகிறாள். அப்படி யார் அவள் மனதை கொள்ளை கொண்டது. தீவிர சிந்தனையில் இருந்தவளின் கண்களில் அது தென்பட்டது. அனிஷா அமர்ந்திருந்த நாற்காலியின் அடியில் அது கிடந்தது. குனிந்து அதை எடுத்து பார்த்தாள். அடுத்த கணம் அவள் முகம் கறுத்து போனது.

அகஸ்டினின் வீட்டில் யாருமில்லை. கிரில் கேட்டை தள்ளிக் கொண்டு உள்ளே புகுந்தாள் அனிஷா.

கட்டப்பட்டிருந்த அந்த பங்களாவின் ஹால் முழுவதும் குளுகுளு வசதி செய்யப்பட்டிருந்தது. ஆடம்பரப் பொருட்கள் அத்தனையும் உரிய இடத்தில் அழகாக வைக்கப்பட்டிருந்தது. சுவர்களில் போதிய இடைவெளி விட்டு தஞ்சாவூர் ஓவியங்கள் மாட்டப்பட்டிருந்தன. தண்ணீரில் நீந்தும் கெண்டை மீன்களைப்போல அகலமான தன் கண்களை அங்கும் இங்கும் சுழலவிட்டாள் அனிஷா. அகஸ்டின் எங்கே காணோம்?

"வா அனிஷா" குரல் கேட்டு திரும்பினாள்.

அகஸ்டினை பார்த்த அனிஷா அதிர்ந்து போனாள். அகஸ்டின் முகத்தில் பலத்த காயங்களோடு இருந்தான். வெற்றுடம்போடு இருந்தான். மார்பில் சிவப்பு நிறத்தில் கீறல்கள் வேறு இருந்தன.

"என்னாச்சு அகஸ்டின்?"

"உள்ளே வா சொல்றேன்"

வீட்டின் கதவை சாத்திவிட்டு அவளை அவனறைக்கு அழைத்து சென்றான். கட்டிலில் அவளை அமரச் சொன்னான். அவள் எதிரில் அவன் அமர்ந்தான்.

"உடம்பெல்லாம் காயமாயிருக்கு. என்னாச்சு அகஸ்டின்?" பதற்றத்தோடு விசாரித்தாள்.

"அப்பா அடிச்சிட்டாருடா!"

"ஏன்?"

"நம்ப விஷயம் அப்பாவுக்கு தெரிஞ்சு போச்சு. உன்னை மறந்துட சொன்னார். என்னால முடியாதுன்னு சொன்னேன். வாக்கிங் ஸ்டிக்காலே அடிச்சிட்டாரு!"

"ரொம்ப வலிக்குதாப்பா?" என்று அவன் காயத்தின் அருகே கையை கொண்டு போனாள்.

"தொடாதே. தொட்டால் வலிக்கும்!" என்று அவள் கையை விலக்கினான்.

"என்ன விட்டுட்டு போயிடுவியா அனிஷா. எனக்கிருக்கிற ஒரே ஆறுதல் நீதான்!" என்று அவளை மென்மையாக அணைத்தான்.

"எனக்கு நீ, உனக்கு நான். நம்மளை யாராலும் பிரிக்க முடியாது!" என்றாள் அனிஷா உறுதியாக. அவன் அவளை இறுக்கினான். அதுவரையில் உணர்ந்திராத ஓர் அற்புதமான உணர்வலைக்குள் இறுக்கமான அரவணைப்புக்குள் அவள் ஆழத்தில் அமிழ்ந்து போனாள். அவன்மீது கொண்டிருந்த தீராத காதலால் அவளை அர்ப்பணித்தாள். வயசைப் பொறுத்து வாலிப சேஷ்டைகள்

இருக்கத்தான் செய்யும். வேனல் காலத்துல வெண்டைச் செடி உலர்ந்து குச்சியா நிக்கும். ஆனா, அதுல பூ வராதா காய் வராதா என்ன?

இயற்கை எப்படியெல்லாம் ஆட்டி வைக்கிறதோ அப்படி ஆடுறதைத் தவிர வேற வழி இல்லை. சிலந்தி வலையில் ஈயைச் சிக்க வைக்கிற மாதிரி மாயை இதுங்களை மோக வலையில் மாட்டி வைக்குது. விளக்கு சுடர்விட்டு எரிந்து, அணைந்து போகிறது. அதுக்கிடையில் அதனுடைய ஜுவாலையில் பொசுங்கி, கருகி போகும் பூச்சிகள் எத்தனை. பொண்ணுங்கறவ மோகினிதான். ஆண் அந்த மோகத்தில் மூழ்குவான், முக்குளிப்பான். அகஸ்டினுடைய வாழ்க்கையில் பெண் என்பவள் புதிதானவள் அல்ல. அவன் பழகாத பெண் இல்லை. பதினாறு வயதிலேயே அவனுக்கு பெண் அறிமுகம் உண்டு. அனுபவமும் உண்டு. ஆனால் எந்தத் தனியொரு பெண்ணிடமும் ஈடுபாடு மட்டும் ஏற்பட்டதில்லை. மிக மிக சுதந்திரமாக வளர்ந்த காரணத்தாலும் பணக்காரத்தனம் படிந்து போனதாலும் வாழ்க்கையை என்று சீரியஸாக எடுத்துக் கொண்டதில்லை.

12

மேஜை மீதிருந்த அகஸ்டின் கொடுத்த மேக்ஸ் நோட் புக் பேன் காற்றில் படபடத்துக் கொண்டிருந்தது. நடுக்கத்துடன் அந்த நோட்டை கையில் எடுத்தாள் ஆராதனா. 'கடவுளே அவனாக இருக்கக்கூடாது' உதடுகள் பலகீனமாக முணுமுணுத்தன. கண்களில் பீதியுடன் அந்த நோட்டை திறந்து பார்த்தாள். 'ஷ்யாம் அகஸ்டின், பி.எஸ்.சி., மேக்ஸ், மூன்றாம் ஆண்டு' என்று முதல் பக்கத்தில் எழுதியிருந்தது. அவளுக்கு சப்த நாடிகளும் சில்லிட்டு போனது. பேரதிர்ச்சியுடன் சோபாவில் சரிந்தாள். உணர்ச்சிகளெல்லாம் வற்றிப் போனது. முகம் கல் மாதிரி இறுகிப் போனது. அந்த இறுக்கத்தை தளர்த்தி வெளிறி வருவதற்கு அவளுக்கு வெகு நேரமாயிற்று.

காயத்ரி இரவுக்கான உணவை சமைத்துக் கொண்டிருந்தாள். அந்நேரம் அழைப்பு மணி அழைத்தது. அறையில் இருந்த அனிஷா எழுந்து போய் கதவைத் திறந்தாள். வெளியே ஆராதனா நின்றுக் கொண்டிருந்தாள்.

"ஹாய் ஆராதனா வா வா. அம்மா யாரு வந்திருக்காங்கனு வந்து பாருங்களேன். ரொம்ப நாளைக்கப்புறம் ஆராதனா நம்ப வீட்டுக்கு வந்திருக்கா!" உற்சாகமாய் அவளது கையைப் பிடித்து உள்ளே அழைத்து போனாள் அனிஷா. சமையல் கட்டிலிருந்து காயத்ரி வெளியே வந்தாள்.

"வாம்மா ஆராதனா. இப்பெல்லாம் இந்த பக்கம் வர்றதேயில்லை?"

"அப்படியெல்லாம் இல்லை ஆன்டி"

"பேசிக்கிட்டிருங்க சமையல் ஆயிட்டிருக்கு. இதோ வந்துடறேன்!" காயத்ரி சமையல் அறைக்குள் சென்றதும் ஆராதனா அனிஷாவை அவளறைக்கு இழுத்துக் கொண்டு போனாள். ஆராதனா அவள் முகத்தை உற்று நோக்கினாள். அனிஷாவின் முகம் வசீகரமாக இருந்தது.

"உன்கிட்டே முக்கியமான விஷயம் பேசணும்!" என்றாள் ஆராதனா.

"என்னடி?"

ஆராதனா அவள் ஹேண்ட் பேக்கை திறந்து அதை வெளியே எடுத்தாள். ஆராதனாவின் கையில் இருந்த டைட்டன் வாட்சை கண்டதும் அனிஷாவின் கண்கள் சந்தோஷத்தில் மின்னின.

"ஏய், இந்த வாட்ச் உன்கிட்டே எப்படி வந்தது?"

"நான் உன்னை பார்த்து கேட்க வேண்டிய கேள்வியை நீ என்கிட்டே கேட்கிறீயா? நீ என் வீட்டுக்கு வந்திருந்தபோ இந்த வாட்ச் உன்னோட ஹேண்ட் பேக்கிலிருந்து கீழே விழுந்து கிடந்தது. இந்த வாட்ச் உனக்கெப்படி கிடைச்சது?"

ஆராதனாவின் கையில் இருந்த வாட்சை ஆசையாக வாங்கினாள் அனிஷா.

"இந்த வாட்ச் என்னோட அகஸ்டின்கிட்டே இருந்து சுட்டது. அன்னிக்கு ஒருநாள் நாங்க தீபிகா ரெஸ்ட்டாரெண்டில் மீட் பண்ணினோம். அப்போது அவன் கையில் பரோட்டா சால்னா சிந்தி விட்டது. வாட்சை கழற்றி வைத்துவிட்டு கையை கழுவுவதற்காக எழுந்து போனான். அவனுக்கு தெரியாமல் இந்த வாட்சை கண்டேன். அவனது கர்ச்சீப் அவனது நோட்புக், அவனது பேனா இப்படி ஏதாவது அவன்கிட்டே இருந்து சுட்டுடுவேன். வீட்டிற்கு வந்த பிறகு அவன் நினைவாக அவை எல்லாவற்றையும் மணிகணக்காக பார்த்து பார்த்து ரசிப்பேன்!"

ஆராதனா நீண்டதாக பெருமூச்சு விட்டாள்.

"இப்போ எல்லா விஷயமும் தெள்ள தெளிவாக ஊர்ஜதனமாயிடுச்சு!" அனிஷா அவளை புரியாமல் பார்த்தாள்.

"இனிமேல் அகஸ்டினை நம்பாதே. அவன்கிட்ட பழகாதே!" "ஏன் ஆராதனா அப்படி சொல்றே?"

"அவன் நல்லவனில்லை அனிஷா. இப்போ நான் சொல்ல போற விஷயத்தை கேட்டு ஆடி போயிடாதே. மனசை திடபடுத்திக்கோ. அவன்தான் இத்தனை நாட்களாக என்னையும் காதலித்திருக்கான்!" அனிஷா அவளை அலட்சியமாக பார்த்தாள்.

"உனக்கு எப்பவும் எதிலேயும் விளையாட்டுதான். சமயத்துல எது எதுல விளையாடறதுன்னு உனக்கு தெரியவே தெரியாது ஆராதனா!"

"காதல் போதையில் இருந்து வெளியே வா!" சற்று குரலை உயர்த்தி சொன்னாள் ஆராதனா.

"இந்த ரேடியம் வைத்த வாட்ச். நான் அவனுக்கு அளித்த பரிசு!" அனிஷா நம்ப முடியாமல் அவளைப் பார்த்தாள்.

"அகஸ்டின் அப்படிப்பட்டவன் கிடையாது. என்மேல் அவனுக்கு ப்ரியம் ஜாஸ்தி. அவன் உண்மையானவன். அவனுக்குதான் உன்னை தெரியாதே. அப்புறம் எப்படி உன்னை காதலிக்க முடியும்!"

"என்னைப் பற்றி அவகிட்ட பேசினாயா?"

"ஆ... ஆமா!"

"உனக்கு தெரியாமல் என்னோட செல் நம்பரை உன்னோட செல்போனில் இருந்து எடுத்திருக்கான். ஷ்யாம்ங்கிற பெயரில் வசீகரமாக பேசி என்னோட மனசையும் கொள்ளையடிச்சிட்டான். அழகாக நம்ப இரண்டு பேர்கிட்டேயும் டபுள் கேம் ஆடியிருக்கான். காதலியோட தோழிகிட்டே பேசறதே காதலிக்கு செய்கிற துரோகம் என்று நினைப்பவர்கள் அந்தகாலத்து ஆண்கள். ஆனால் இப்போ காதலியோட தோழியையும் வசீகரம் பண்றதுக்கு மாஸ்டன் பிளான் போட்டுக்கிட்டிருக்காங்க. உன்னா இப்பகூட நம்ப முடியாதளவிற்கு உன்னிடம் ஆசை வார்த்தைகளால் பேசி நம்ப வெச்சு முட்டாள் ஆக்கியிருக்கான். இதோ பாரு அவனது மேக்ஸ் நோட் சில சந்தேகங்களுக்காக என்கிட்டே கொடுத்தான்!"

அனிஷா அந்த மேக்ஸ் நோட்டை வாங்கி பார்த்தாள். அகஸ்டினோட கையெழுத்து ஒவ்வொரு பக்கத்திலும் அழகாக இருந்தது. இவளோட காதலனின் நோட் தோழியின் கைக்கு எப்படி போயிருக்க முடியும். அவன் அவளை சந்தித்து கொடுத்தாலொழிய அனிஷாவின் நெஞ்சில் இடி இறங்கியது. வேதனை தாங்க முடியாமல் மனம் உடைந்து அழுதாள்.

"அழாதே அனிஷா. அவன் அயோக்கியன். இப்பவாவது நமக்கு தெரிஞ்சதே தெரிஞ்சோ தெரியாமலோ அவன்கிட்டே மனசை பறி கொடுத்துட்டே. கொஞ்சங் கொஞ்சமாக அவனை மறந்துடு. எனக்கு பேரதிர்ச்சியாகதான் இருந்தது. இப்போ அவன் உருவத்தை சுத்தமா நினைவில் இருந்து அழிச்சுட்டேன். சாக்கடையில கல்லை விட்டெறிஞ்சா நம் மீதுதான் படும அதனாலே அவனை தலை மூழ்கிவிட்டு ஒதுங்கிடுவோம்!"

அனிஷா விக்கி விக்கி அழுதாள்.

"எப்படி அவனை மறக்க முடியும்? மனசை மட்டுமா அவன்கிட்டே தொலைச்சேன். என் கற்பையும் அவன்கிட்டே தொலைச்சிட்டேன்!" ஆராதனா நெஞ்சம் அதிர்ந்து அவளை பார்த்தாள். "எ... எப்படி அனிஷா அதுக்கு துணிஞ்சே?"

"நீதான் முக்கியம்னு என் அப்பாகிட்டே சொன்னேன். என்னை அடிச்சிட்டாருனு சொலி அவன் முகத்தில் இருந்த காயத்தை காண்ப்பிச்சி என் மனசை இளகி... அவன் ஊதின மகுடிக்கேற்ப என்னை ஆடவெச்சுட்டான். அவன் என்னை ஏமாத்தினதை நினைச்சா தாங்கமுடியலை. எப்படி ஆராதனா இப்படி ஒரே நேரத்துல நம்ப இரண்டு பேர்கிட்டேயும் அவ்வளவு அழகா பேசியிருக்கான்."

"சில பணக்கார பசங்களுக்கு தினம் ஒரு பொண்ணு வேணும். காதல் தெய்வீகமானது எல்லாம் அவர்களுக்கு புரிவதில்லை!"

"என்னால தாங்க முடியலை ஆராதனா" அனிஷா அழுதாள். அந்நேரம் ஆராதனாவின் செல்போன் சிணுங்கியது. அவள் அம்மாவிடமிருந்து போன் வந்தது.

"மணி என்னாகுது. இன்னும் அங்க என்ன பண்ணிகிட்டிருக்கேடி!"

"இதோ வர்றேம்மா!" அனிஷாவை ஏறிட்டாள்.

"அனிஷா எங்கம்மா கூப்பிடறாங்க. எனக்கு டைம் ஆச்சு. நான் கிளம்பறேன். எதையும் போட்டு நினைச்ச மனசை குழப்பிக்காதே. நாம நாளைக்கு சந்திக்கலாம்!" அனிஷாவிடம் விடை பெற்றுக் கொண்டு ஆராதனா வேகமாக கிளம்பினாள். மைக்கேல் ஜாக்ஸனின் இசை டி.வி.டி பிளேயரில் கசிந்து கொண்டிருந்தது. அகஸ்டின் அந்த பாடலின் வரிகளை முணுமுணுத்துக் கொண்டு ரசித்து பார்த்து கொண்டிருந்தான். அந்நேரம் அவனது செல்போன் சிணுங்கியது. எடுத்து 'ஹலோ' என்றான்.

"நான் என் வீட்டு வாசலில் உனக்காக காத்துகிட்டிருக்கேன். ஒரு நிமிஷம் வந்துட்டுபோ!" இணைப்பு துண்டிக்கப்பட்டது. குரலை

வைத்து அனிஷா என்பதை தெரிந்து கொண்டான். இவளிடம் இருந்துதான் போன் என்பதை சரியாக பார்த்திருந்தால் போனை வைக்காமல் இருந்திருப்பேனே என்று நினைத்துக் கொண்டான். கேட்டைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். கேட்டிற்கு வெளியே சற்று தள்ளி இருட்டில் ஒரு ஓரமா£க நின்று கொண்டிருந்தாள் அனிஷா. வெறுப்பை மறைத்துக் கொண்டு குலை குழைத்துக் கொண்டு பேசினான்.

"என்னடா இந்த நேரத்துக்கு வந்திருக்கே. யாராவது பார்துட போறாங்க!" சிவந்து போயிருந்த விழிகளுடன் அவனை பார்த்து அனிஷா கேட்டாள்.

"ஆராதனாவையும் நீ காதலிக்கிறியா?" அகஸ்டின் ஒரு கணம் திகைத்துப் போனான்.

"ஆ... ஆராதனாவா யார் அது?"

"எனக்கு எல்லா விஷயமும் தெரிஞ்சு போச்சு. என்கிட்ட ஆசையாக பழகின மாதிரி அவகிட்டேயும் பழகியிருக்கே!"

அகஸ்டின் முகம் மாறினான். உஷ்ணமான பெருமூச்சு ஒன்றை வெளியிட்டான். பின்பு "ஆமா" என்றான் எந்தவித பதட்டமுமில்லாமல். "அப்போ அது எனக்கு பண்ணின துரோகம்தானே!"

"நான் அப்படி நினைக்கலை. எனக்கு என்னிக்குமே அனிஷாவும் ஒண்ணுதான், ஆராதனாவும் ஒண்ணுதான். ஒரு பொண்ணை காதலிச்சு அவளையே கல்யாணம் பண்ணிகிட்டு சின்ன வட்டத்துக்குள்ள வாழறது எல்லாம் எனக்கு பிடிக்காது. வாழ்க்கை கடல் போன்றது. நல்ல என்ஜாய் பண்ணணும்!"

"மனசு வலிக்குதுடா. என்னால தாங்க முடியலை. ஒவ்வொரு நாளும் எனக்கு எல்லாமே நீதான். உன்னை விட்டு போகமாட்டேன் சொல்லி சொல்லி என்னை நம்ப வெச்சே என்கிட்ட பேசின அதே ஆசை வார்த்தையை என் தோழிகிட்டேயும் பேசி பழகியிருக்கேங்கிறதை நினைக்கும்போது நெஞ்சம் குமுறுது. வலிக்குதுப்பா.. துரோகம் பண்ணிட்டே அகஸ்டின், இப்பகூட நீயா இப்படி துரோகம் பண்ணினே என்பதை என்னால நம்ப முடியலை. அந்த அளவிற்ககு என்னோட மனசு முழுவதும் கொள்ளையடிச்சிட்டே எப்படிடா?

எப்படிடா நீ எனக்கு பண்ணின. என் கற்பை வேறு சூறையாடிட்டே. அதையெல்லாத்¬தையும் மறந்துட்டு என்னால எப்படி வேறொரு வாழ்க்கையை அமைச்சுக்க முடியும்!"

அவன் மார்பில் விழுந்து கதறினாள். "நீ எனக்கு

கிடைக்கணும் என்பதால்தான் உன்னிடம் ஆசையாக பேசி பழகினேன். என்னிக்கு நீ கிடைச்சிட்டியோ அதற்கப்புறம் உன்னிடம் பேசுவதற்கு வேறு ஒன்றும் இல்லை. நீ போகலாம்!"

தன்னை அவளிடமிருந்து விலக்கிக் கொண்டு வீட்டிற்குள் சென்று கதவை அடைத்தான். நடு ரோட்டில் அப்பாவியாக கண்ணீர் மல்க நின்று கொண்டிருந்தாள் அனிஷா. தளர்ந்து போன கால்களுடன் அவள் வீட்டிற்கு வந்தாள். அவள் உள்ளே நுழைந்ததும்தான் தாமதம்.

"எங்கே போயிட்டு வர்றே"

அனிஷாவின் அப்பா கார்த்திகேயன் அதட்டலான குரலில் கேட்டார். அனிஷா வாயை திறக்காமல் ஜடப்பொருள்போல் நின்றுக் கொண்டிருந்தாள்.

"உன்னைதான் கேட்கிறேன். பதில் சொல்லாமல் வாயடைச்சு போய் நிற்கிறே எங்ககிட்டே சொல்லாமல் இந்த நேரத்துக்கு எங்கே போயிட்டு வர்றே?" அனிஷா தொடர்ந்து வாயைத் திறக்காமல் கார்த்திகேயனையே வெறித்து பார்த்£ள். கார்த்திகேயன் கோபம் வந்து அவள் கன்னத்தில் பளாரென அறைந்து விட்டார். காயத்ரி பதறி போனாள்.

"சொல்லுடி அப்பா கேட்கிறாருல எங்கே போயிட்டு வர்றே?"

"வண்டிக்கு பெட்ரோல் போட்டுட்டு வர்றேன்!" அவளுக்கான மெல்லிய குரலில் சொன்னாள்.

"என்கிட்டே சொல்லியிருந்தால் நான் நாளைக்கு போய் பெட்ரோல் போட்டுட்டு வந்திருக்க மாட்டேனா. என்கிட்டேயும் அம்மாகிட்டேயும் சொல்லாமல் இந்த நேரத்துக்கு கிளம்பி போய் பெட்ரோல் போட்டுட்டு வந்திருக்கே... படிப்பில்தான் சுமார் ரகம். எதையும் யோசித்து செய்யணும். புத்தி என்னிக்குதான் உனக்கு வரப்போகுதோ தெரியலை போ போ!" கார்த்திகேயன் கடுமையாக சொன்னாள்.

13

அதிகாலையில் ஆராதனாவின் செல்போன் ஒலித்தது. அகஸ்டின் தன்னையும் ஏமாற்றி இருந்ததால் இரவு முழுவதும் வேதனையில் இருந்தாள். மன வேதனையுடன் தூங்கிப் போனாள். அவளது செல்போன் தொடர்ந்து சிணுங்கியபடி இருந்தது. ஐந்தாவது முறை சிணுங்கியபோதுதான் அதனுடைய சப்தம் கேட்டு

கணவழுத்தாள். கண்கள் எரிந்தன. லேசாக வீங்கி போயிருந்தது. காலங்காத்தால யார் பேசறது என்று நினைத்தவாறு போனை ஆன் பண்ணி 'ஹலோ' என்றாள்.

மறுமுனையில் ஒரு பெண்ணின் அழுகை குரல் கேட்டது. அழுகை சத்தத்தை கேட்டவுடன் ஆராதனாவின் ஒட்டு மொத்த தூக்கமும் கலைந்து போனது. "யார் பேசறது?" லேசான படபடப்புடன் கேட்டாள்.

"ஆராதனா நான் அனிஷாவோட அம்மா பேசறேம்மா அனிஷா. நேத்து ராத்திரி விஷத்தை குடிச்சிட்டாம்மா. ஆஸ்பத்திரியில் உயிருக்கு போராடிகிட்டிருக்காம்மா!"

ஆராதனாவிற்கு தூக்கி வாரிப் போட்டது. போர்வையை உதறி தள்ளிவிட்டு எழுந்து உட்கார்ந்தாள்.

"ஆன்ட்டி என்ன சொல்றீங்க?"

"நேத்து ராத்திரி எங்ககிட்டே சொல்லாமல் ஸ்கூட்டியை எடுத்துகிட்டு பெட்ரோல் போடுவதற்காக போயிட்டு வந்தா. எங்கப்பாவிற்கு கோபம் வந்து அவளை அடிச்சிட்டாரு. அதை தாங்கிக்க முடியாம விஷத்தை குடிச்சிட்டா!" காயத்ரியின் அழுகை பெரிதாக வெடித்தது.

"ஆன்ட்டி நீங்க எதற்கும் கவலைபடாதீங்க. அவளுக்கு ஒன்றும் ஆகாது. நானும் அம்மாவும் உடனே கிளம்பி வர்றோம். நீங்க தைரியமா இருங்க!"

"சீக்கிரமா வாம்மா எனக்கு ரொம்ப பயமா இருக்கு!"

காயத்ரி அழுதவாறு போனை வைத்தவுடன் ஆராதான உள்ளுக்குள் பொருமினாள். வேகமாக அகஸ்டின் நம்பருக்கு பட்டனை தட்டினாள்.

"ஹலோ" என்று அவனது குரல் தூக்க கலக்கத்தில் கேட்டது.

"நான்தான் பேசறேன். ஒரு சோகமான செய்தி. அனிஷா விஷத்தை குடிச்சிட்டா. உடனே கிளம்பி வா!" என்றாள் ஆராதனா.

ஒரு நொடி மறுமுனையில் கணத்த மௌனம் நிலவியது.

"அவள் விஷத்தை குடிச்சதுக்கு நான் ஏன் கிளம்பி வரணும்?" என்று அவன் கேட்டான்.

"நீ அவளுக்கு பண்ணின துரோகத்தை தாங்கிக் முடியாமல்தான் இந்த நிலைமைக்கு ஆளாயிட்டா.

"என்னை மன்னிச்சிடு. நான் உன்னை ஏத்துக்கிறேனு அவகிட்டே வந்து சொல்லு. அப்போதான் அவள் பிழைப்பாள்!"

"நான் அது மாதிரி அவள்கிட்டே வந்து சொன்னால் நீ எனக்கு என்ன கொடுப்பே?"

"புரியலை!"

"புரியும்படியாகவே சொல்கிறேன். நீ சொல்கிற மாதிரி உன் தோழி அனிஷாகிட்டே வந்து என்னை மன்னிச்சிடு, உன்னை ஏற்று கொள்வதற்கு தயார் என்று நான் அவள்கிட்டே சொல்கிறேன். நான் அதுமாதிரி நடந்து கொண்டால் நீ எனக்கு கிடைப்பியா. எனக்கு நீ வேணும் ஆராதனா!" என்றான் அகஸ்டின்.

"பொறுக்கி ராஸ்கல். உன்னோட திமிறு கொழுப்பு இன்னும் அடங்கலையா. ஆம்பிளைங்கிற ஆணவத்துல ஆடுறீயா. பெண்களோட மனசு கண்ணாடி மாதிரி அதுல எல்லா ஆம்பிள்ளைகளும் கல்லை விட்டெறிஞ்சு வேடிக்கை பார்க்கறீங்களா? உன் மாதிரி ஆம்பிள்ளைங்க இருக்கிறதால்தான் இப்பெல்லாம் பெண்கள் யாரையும் மதிப்பதில்லை. அமைதியாக அடக்கமாக புருஷனுக்கு கீழ்படிந்து நடக்கணும் என்று நினைக்கிற பெண்கள்கூட ஆண்கள் பண்ணுகிற நம்பிக்கை துரோகத்தால் தடைகளையும் விதிமுறைகளையும் உடைத்தெறிந்து விட்டு எதையாவது சாதித்து ஆண்களைவிட ஒருபடி முன்னேறி காண்பிக்கணும்னு போராடுறாங்க. அனிஷா படுகிற வலியும் வேதனையும் இப்போ உனக்கு புரியாமல் இருக்கலாம். ஆனால் காலம் உனக்கு அதை உணர்த்தும். உன்னை மாதிரி...!"

அகஸ்டின் பட்டென இணைப்பை துண்டித்தான். ஆராதனா மீண்டும் அவன் நம்பருக்கு டிரை பண்ணினாள். அவன் போனை எடுக்கவேயில்லை. அனிஷா ஆஸ்பத்திரியில் உயிருக்கு போராடிக் கொண்டிருப்பதை நேரில் பார்த்தாலாவது அவன் மனம் இளகுவான் என்று நினைத்தாள். ஆனால் அவனுக்கு மனசு என்று ஒன்று இருப்பதாக தோன்றவில்லை அவளுக்கு. ஐ.சி. யூனிட்டில் படுக்கையில் வாடிய கீரைத் தண்டாய் நலிந்து சுவாசத்துக்கு போராடிக் கொண்டிருந்த நிலையில் சிரமமாக இமையை திறக்க முடியாமல் பலவீனமாக கிடந்தாள் அனிஷா. அவளை கவலை பொங்க பார்த்தாள் ஆராதனா.

நல்லவன் போல் நடித்து ஏமாத்தினவனிடம் உன்னோட மனசையும் உன்னோட கற்பையும் சேர்த்து பறி கொடுத்துட்டு இப்படி கசங்கிய நாறாக இருக்கிறீயேடி என் செல்லமே!" வேதனை தாங்க முடியாமல் ஆராதனா அழுதாள்.

அவளுடைய நாடியை பரிசோதித்துக் கொண்டிருந்த டாக்டரின் முகத்தைப் பார்த்தாள். டாக்டரின் முகத்தில் நம்பிக்கை ரேகை தென்பட்டது. சில நாட்களில் சீரியஸான கண்டிஷனில் இருந்து தாண்டினாள். பூரணமாக குணமடைந்தாள் அனிஷா. அனிஷாவின்

இமைகள் படபடவென்று திறந்தன. கண்களை மெதுவாக திறந்து பார்த்தாள். கண்களுக்கு எல்லாமே மங்கலாக தெரிந்தன. தான் மேரி ஆர்ட்ஸ் கல்லூரிக்கு ஸ்பீச் கொடுப்பதற்காக வந்திருப்பது தெரிந்தது. அவளருகே பிரின்சிபால் ஆரோக்கிய மேரி இன்னும் சில ஆசிரியைகள் சூழ்ந்திருந்தார்கள். அனிஷா கையை ஊன்றி மெல்ல எழுந்து உட்கார்ந்தாள். காலை நேரத்து பிரகாசம் அவளுக்குப் புதிய தெம்பை அளித்தது.

ஆரோக்கியமேரி கேட்டாள்.

"மேடம் இப்போ உடம்பு எப்படி இருக்கிறது?"

"ஐயம் ஸாரி. மைண்ட் கொஞ்சம் டிஸ்டர்ப்ட் ஆகி மயக்கமாயிட்டேன்!"

"இன்னிக்கு உங்களால் முடியலைன்னா உங்க ப்ரோகிராமை இன்னொரு நாள் மாத்திக்கலாம்!"

"நோ நோ ரொம்ப நாட்களாகவே நான் படிச்ச கல்லூரிக்கு வரணும்னு நினைச்சுகிட்டிருந்தேன். பிஸியாக இருந்ததால் வரமுடியலை. இந்த அருமையான நாளை இனிமேலும் தள்ளி போடக்கூடாது. வாங்க, ஆடிட்டோரியத்துக்கு போவோம்!"

விழா தொடங்கியது பாட்டு, டான்ஸ், டிராமா என விதவிதமான ப்ரோகிராம்கள் நடைபெற்றன. அனிஷா எல்லாவற்றையும் பார்த்து ரசித்தாள். அனைத்து நிகழ்ச்சிகளும் முடிவடைந்த பிறகு இறுதியாக ஸ்டேஜ் ஏறி மைக்கை பிடித்தாள். அனைவரையும் பார்த்து புன்னகைத்தாள் அனிஷா: ஸ்டூடண்ட்ஸ் எழுப்பிய கரகோஷத்தால் ஆடிட்டோரியமே அதிர்ந்தது. அனிஷா உற்சாகமாய் பேச தொடங்கினாள்.

"எல்லோருக்கும் என்னுடைய தாழ்மையான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல வருடங்களுக்கு முன்னால் அனைவரையும் போல் ஒரு சராசரி மாணவியாக இந்த ஆடிட்டோரியத்தில் அமர்ந்து இந்த கல்லூரிக்கு வரும் எத்தனையோ பேருடைய பேச்சை கேட்டிருக்கேன். நானும் ஒருநாள் கலெக்ட்ராகி நான் படித்த கல்லூரிக்கு சிறப்பு விருந்தினராக வந்து ஸ்பீச் கொடுப்பேன் என்று நினைத்து பார்த்ததுகூட கிடையாது. இந்த நேரத்தில் இந்த இடத்தில் நிற்பதற்கு எனக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது. நான் இந்தளவிற்கு உயர்வடைந்ததற்கு என்ன காரணம்? கடின உழைப்பு. கடினமாக உழைத்து வெற்றி பெறுவதற்கு எனக்குள் ஒரு உந்துதலை ஏற்படுத்தியது யார்? நான் கடந்து வந்த பாதை... எனக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவம் இதெல்லாம்தான் தமிழ்நாட்டு

மக்களுக்கே அனிஷா என்றால் யாரென்று தெரிய வேண்டும் என்று எனக்குள் ஒரு வெறியை ஏற்படுத்தியது. உங்களுக்கெல்லாம் ஒன்று சொல்கிறேன். உங்களுக்கு எத்தனை சோதனைகள் வந்தாலும் களங்காதீர்கள். சோதனைகள்தான் உங்களை சாதனையாளராக மாறுவதற்கு தூண்டிவிடுகிறது. ஓர் இளைஞன் வாழ்க்கையில் ஒரு லட்சியத்தை அடையணும்னா அவமானங்களை சேர்த்து வைக்கணும்னு சொல்லுவேன். அவைதான் உங்களைப் பக்குவப்படுத்தும். உயரே தூக்கி வைக்க காரணமாக இருக்கும். உளி தாங்கும் கற்கள்தானே மண்மீது சிலையாகும். நான் கூறுவது சரியா?"

கைதட்டல்களும் விசில்களும் தூள் பறந்தன. "கல்லூரி வாழ்க்கை மிகவும் இனிமையான வாழ்க்கை போனால் திரும்ப வராது. அதனால் லை.ப்பை நல்லா என்ஜாய் பண்ணுங்க. அதே சமயம் கவனத்தை சிதற விட்டுடாதீங்க. என்னவாக ஆகணும் என்று நினைக்கிறீர்களோ அதற்கான இலக்கை நோக்கி அயராது ஓடிக் கொண்டே இருங்கள். வெற்றி உங்களை தேடி வரும். இங்கிருப்பவர்கள் வருங்காலத்தில் மற்றுமொரு கிரண்பேடியாகவோ, மற்றுமொரு சச்சின் டெண்டுல்கராகவோ, மற்றுமொரு சிவாஜி கணேசனாகவோ ஊரே போற்றும்படி இருப்பீர்கள் என நம்புகிறேன். இருப்பீர்களா?" என்ற அவள் உரக்க கேட்க, மாணவ-மாணவிகள் உற்சாகத்துடன் 'இருப்போம்' என்று கோரஸாக குரல் எழுப்பினார்கள். கல்லூரியில் உரையை முடித்துவிட்டு அவள் காரில் அவள் இல்லத்துக்கு சென்று கொண்டிருந்தாள்.

அப்போது அனிஷாவின் செல்போன் சிணுங்கியது. திரையில் ப்ளாஷான நம்பரை பார்த்ததும் அவள் முகம் சந்தோஷமாய் பின்னியது. செல்போனை காதுக்கு கொடுத்து "ஹாய் ஆராதனா எப்படி இருக்கே?

அமெரிக்காவில் மணவாழ்க்கை எப்படி போய்கிட்டிருக்கு!"

"சூப்பரா போய்கிட்டிருக்கு. நீ படிச்ச கல்லூரியை பார்த்தியா? என்ன ஸ்பீச் கொடுத்துட்டு வந்தே?"

"நான் படிச்ச காலேஜ் இப்போ நிறைய மாற்றங்கள். நிறைய பி.ஜி-. டிகிரி எல்லாம் ஆரம்பிச்சிருக்காங்க.

காலேஜுக்குள் நுழைந்ததும் எனக்கு பழைய நினைவுகள் வந்து மைண்ட் கொஞ்சம் அப்செட் ஆயிடுச்சு!" மறுமுனையில் ஆராதனா அமைதியானாள்.

"என்னாச்சு பேச்சை காணோம்?"

"இன்னும் எத்தனை நாட்களுக்குதான் இப்படியே இருக்க

போறே உனக்குனு ஒரு வாழ்க்கை அமைச்சுக்கூடாதா? உனக்கென்று ஒரு துணை வேண்டாமா?"

"இந்த விஷயத்தை பத்தி என்கிட்டே பேசாதேன்னு உன்னிடம் எத்தனையோ வாட்டி சொல்லிட்டேன். ஆண்கள் ஏமாற்று பேர்வழிகள். இன்னொருமுறை வாழ்க்கையில் நான் தோற்பதற்கு தயாராயில்லை. நான் ஜெயிப்பதற்கு என பிறந்தவள். எனக்கு ஏற்பட்ட விபத்தை நான் என்னிக்கோ மறந்துட்டேன். வயோதிக காலத்தில் என் அம்மா அப்பாவிற்கு சித்தமாக சேவை செய்வதுதான் எனக்கு பிடிச்சிருக்கு ஆராதனா!"

"சரிப்பா உன்னுடைய விருப்பத்தில் நான் தலையிடலை. குழந்தை முழிச்சிட்டா அவளுக்கு பால் குடுக்கணும் பை அனிஷா!" என்று சொல்லிவிட்டு போனை வைத்தாள் ஆராதனா.

14

அகஸ்டினுக்கு இப்போது இருபத்தியெட்டு வயது முப்பது வயதுக்குரிய புஷ்டி உடம்பில் தெரிந்தது. ஒரு கண்ணில் கள்ளமும் இன்னொரு கண்ணில் கபடமும் நிறையவே தெரிந்தன. வலது கை விரல்களில் நடுவே புகைந்து கொண்டிருந்த சிகரெட் சாம்பலில் கனத்துத் தலை தொங்கப் போட்டிருந்தது.

"ரியல் எஸ்டேட் அதிபர் அகஸ்டினுக்கும் தொழிலதிபர் ராகுல்வர்மாவின் மகள் ரீதிக்கும் அடுத்த வாரம் ஸ்ரீராகவேந்திரா திருமண மண்டபத்தில் திருமணம் என்று அன்றைய தினத்தின் நியூஸ் பேப்பரில் வெளிவந்திருந்த செய்தியை பெருமையுடன் படித்துக் கொண்டிருந்தாள் ரீதி. அந்த செய்தியை அகஸ்டினிடம் காண்பித்தாள். அகஸ்டின் லேப்டாப்பில் மூழ்கியிருந்தான்.

"நான் சொல்றதை கவனிக்கிநீங்களா? இல்லையா?"

"ம்" என்றான்.

"என்ன ம் என்னை காதலிக்கும்போது எந்த நேரமும் என்னையே சுத்தி சுத்தி வந்தீங்க. என்கிட்டே நிறைய பேசினீங்க. இப்போ நமக்கு கல்யாணம் நிச்சியம் ஆனபிறகு கண்டுகிறதேயில்லை!"

"அப்படியெல்லாம் இல்லை ரீதி!" என்றான் கம்யூட்டரிலிருந்து கண்களை எடுக்காமலேயே. அந்நேரம் அவன் செல்போன்

சிணுங்கியது. செல்போனை காதுக்கு கொடுத்து 'ஹலோ' என்றான்.

"ஹாய் அகஸ்டின் எப்படி இருக்கீங்க. முன்னாடிவிட இப்போ ஒரு சினிமா ஹீரோ மாதிரி அட்டகாசமாக இருக்கீங்க. எனக்கு எப்பவும் உங்க நினைவாகவே இருக்கிறது. உங்களை பார்த்துக்கிட்டே இருக்கணும் போல் இருக்கு!" அகஸ்டின் லேசான சஞ்சலத்துடன் நிமிர்ந்தான்.

"யார் பேசறது?"

மறுமுனையில் பேசிய அந்த பெண் இச்சென்று ஒரு முத்தத்தை பதித்துவிட்டு பட்டென இணைப்பை துண்டித்து விட்டாள். யோசனையுடன் அமர்ந்திருந்தவனை ரீதி இடித்தாள்.

"போண்ல யாருங்க?"

"வ... வந்து அ.ஃபிஷியல் கால். நீ கிளம்பு. நாம ஈவினிங் ஸ்பென்சர் ப்ளாசாவில் மீட் பண்ணலாம்!"

ரீதி அவனிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினாள். அவளது மாருதி காரில் ஏறினாள். கார் தெரு முனையில் மறையும்வரை காத்திருந்தான். பின் கதவை சாத்திவிட்டு உள்ளே போய் சிவப்பு கம்பளம் விரித்திருந்த ஹாலை கடந்து தன் அறைக்குள் நுழைந்தான். சற்று முன்பு பேசிய அந்த பெண்ணோட நம்பருக்கு பட்டனை தட்டினான். ரிங் அடித்துக் கொண்டே இருந்தது. இரண்டாவது முறை டிரை பண்ணினான் அந்த பெண் பேசினாள்.

"யார் பேசறது?" என்று கேட்டாள் அந்தப் பெண்.

"நான் உன்னிடம் கேட்க வேண்டிய கேள்வியை நீ என்கிட்டே கேட்கிறீயா யார் நீ? போன்ல னக்கு முத்தம் வேறு குடுக்கறே!"

"எனக்கு உன்னை ரொம்ப பிடிக்கும் அகஸ்டின்!"

"யார் நீ?"

"நான் ஒரு சின்னப் பொண்ணு!"

"விளையாட்டு போதும். உன்னை நான் பார்க்கணும்!"

"ஓ, தாராளமாக பார்க்கலாமே!"

"எங்கே மீட் பண்ணலாம்?"

"இன்னிக்கு ஈவினிங் ஸ்பென்சர் ப்ளாசாவில்!" என்றாள் அவள்.

அகஸ்டின் அமைதியானான்.

"என்ன சத்தத்தையே காணோம்?" அவன் சில நொடிகள் யோசித்தான். பின்பு "சரி" என்றான்.

"சரியாக ஐந்து மணிக்கு உனக்காக ஸ்பென்சர் ப்ளாசாவில் காத்துகிட்டிருப்பேன். லேட் பண்ணினே கிளம்பி போய்கிட்டேயிருப்பேன்!"

"நீ சொன்ன டயத்துக்கு நான் அங்கே இருப்பேன்!" என்றான் அவன். அவள் போனை வைத்த பிறகு அகஸ்டினின் நினைவுகள் அவளையே சுற்றி சுற்றி வந்தன. யாரிவள்? இப்படி கலங்கடிக்கிறாள். எப்படியாவது அவளை அடையவேண்டும் என்று மனம் துடிக்க ஆரம்பித்தது. மாலை ஸ்பென்சர் பிளாசாவில் இருந்த ரெஸ்ட்டாரெண்டில் ரீதிக்கு தேவையானதை ஆர்டர் செய்து கொடுத்துவிட்டு அவள்கிட்டே "சாப்பிட்டுகிட்டிரு இதோ வந்துடறேன்!" என்று எழுந்தாள். லேண்ட் மார்க் ப்ளோருக்கு வந்து ரகஸிய சிநேகிதிக்காக காத்திருக்க தொடங்கினான். நிமிடங்கள் கரைந்தன. அந்நேரம் அவனுடைய மொபைல் சிணுங்கியது. அவள்தான் என்று நினைத்து ஆவலுடன் நம்பரை பார்த்தான். ரீதி பேசினாள்.

"நான் மட்டும் எவ்வளவு நேரம் தனியாக உட்கார்ந்து சாப்பிட்டுகிட்டிருக்கிறது எங்கே போனீங்க?"

"ஒரு ∴ப்ரெண்ட் திடீரென வந்துட்டார் பேசிகிட்டிருக்கேன் இதோ வந்துட்டேன்!" என்று இணைப்பை துண்டித்துவிட்டு ரகஸிய சிநேகிதியின் நம்பருக்கு டிரை பண்ணினான். ரிங் அடித்துக் கொண்டே இருந்தது. போனை எடுக்க மாட்டேங்கிறாளே. போனை வெச்சுட்டு எங்கே போனாள்? ஒருவேளை இங்கே சந்திக்கப் போவதை மறந்து போனாளோ? கொஞ்ச நேரம் அவளுக்காக காத்திருந்து விட்டு ரெஸ்ட்டாரெண்டிற்கு வந்தான்.

ரீதி சாப்பிட்டு கோபித்துக் கொண்டு அவன்மீது பொய்யாக கோபித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள். அவளை சமாதானப்படுத்தாமல் இறுகி போன முகத்துடன், அகஸ்டின் சாப்பிட தொடங்கினான். ரீதியின் மனம் ஏமாற்றமடைந்தது.

15

அகஸ்டின் விளக்கை எல்லாம் அனைத்துவிட்டு ஜன்னலின் திரைச்சீலையை விலக்கினான். ஜன்னலுக்கு வெளியே அடர்த்தியான இருட்டு அப்பி கிடந்தது. பெரிதாக ஒரு கொட்டாவி விட்டபடி கை, கால்களை பரப்பி கட்டிலில் விழுந்தான். அடுத்த கணம் தூங்கிப் போனான். நள்ளிரவு பன்னிரெண்டு மணியள்ளவில் அவனது செல்போன் அலறத் தொடங்கியது. தூக்கம் கலைந்து எழுந்து பேசினான். ரகஸிய சிநேகிதிதான் பேசினாள்.

"என்ன டியர் நல்ல தூக்கமா?"

"ம்" என்றான் தூக்க கலக்கத்தில்.

"நான் அங்கே வரட்டுமா?" என்று அவள் கேட்டாள்.

அகஸ்டின் படக்கென கண்களை திறந்தான்.

"ஏய் யார் நீ? உன் பெயர் என்ன?"

"நான் உனக்கு ஏற்கனவே அறிமுகமானவள். என்னை நேரில் பார்க்கும்போது நான் யாரென்பது உனக்கு தெரிஞ்சிடும்!"

"நீ என்ன பண்றே?"

"நான் ஒரு டி.வி. சீரியல் ஆர்ட்டிஸ்ட்!"

அகஸ்டின் மனதில் எண்ணங்கள் ஓடின. டி.வி. சீரியல் ஆர்டிஸ்டா அப்படின்னா நிச்சயம் அழகாக இருப்பாள். வழிய வருபவளை விட்டுவிட கூடாது. பட்டென அவளிடம் கேட்டுவிட்டான் "வர்றீயா?"

"ஓ யெஸ்!" என்றாள் அவள்.

"எங்கே?" அவள் சில நொடிகள் யோசித்தாள்.

"நாளைக்கு ஈவினிங் ஸ்டார் ஹோட்டல் வுட்மூனில்!"

"நேத்து ஸ்பென்சர் ப்ளாசாவல் இருக்கும் லேண்ட் மார்க்கிற்கு ஏமாத்திட்டே உன்னை எப்படி நம்புவது?"

"லேண்ட் மார்க்கில் எனக்கு தெரிஞ்ச உறவினர் ஒருவர் என்னை பார்த்துவிட்டார். அவர்கூட அப்படியே கிளம்பிட்டேன். நாளைக்கு கண்டிப்பாக வருவேன். ரெட் கலர் ஷிபான் ஸாரியில் வருவேன். தவறாமல் வந்துவிடு!" என்று அவனிடம் சொல்லிவிட்டு அவள் இணைப்பை துண்டித்தாள். அவளிடம் பேசின பிறகு அகஸ்டின் உற்சாகமாய் புரண்டு படுத்தான்.

தொலைக்காட்சியில் சன் மியூஸிக்கில் ஒளிபரப்பாகி கொண்டிருந்த அக்கம் பக்கம் யாரும் இல்லாத பூலோகம் வேண்டும்... பாடலை ரசித்து பார்த்துக் கொண்டிருந்தாள் ரதீ. அவளுடைய செல்போன் சிணுங்கியதுகூட தெரியாமல் அந்தளவிற்கு பாடலில் லயித்துப் போயிருந்தாள். பாடல் முடிந்த பிறகுதான் அவளுடைய செல்போன் ரிங்காகிக் கொண்டிருப்பது கேட்டது. எடுத்து 'ஹலோ' என்றாள்.

'உன்னுடைய வருங்கால கணவன் நல்லவனில்லை. பெண்களை ஆசை வார்த்தைகளால் பேசி மயக்கி ஏமாற்றுபவன். ஒருநாள் உனக்கும் இந்த நிலைமை வரலாம். இன்னிக்கு இரவு முழுவதும் ஹோட்டல் வுட்மூனில் என்கூட தங்கப் போகிறான். அவனை நம்பாதே!" என்று ஒரு பெண்ணோட குரல் அவளை எச்சரித்து விட்டு இணைப்பை துண்டித்தது. ரீதி அதிர்ந்துப் போனாள்.

வெரண்டாவில் புல் தரையில் போடப்பட்டிருந்தது. சேரில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தார் ராகுல்வர்மா. ரீதி அவரிடம் படபடப்புடன் வந்தாள்.

"டாடி எனக்கு இப்போ ஒரு போன் கால் வந்தது. அகஸ்டின் நல்லவனில்லை அவனை நம்பாதேனு! ஒரு பொண்ணு சொல்லிட்டு கட் பண்ணிட்டாள்!"

ராகுல்வர்மா அவளோட போனை வாங்கி சற்று முன்பு அவளுக்கு வந்த நம்பருக்கு தொடர்புகொண்டு பார்த்தார். ஸ்விட்சுடு ஆ.ப் என்று வந்தது. ராகுல்வர்மா யோசனையாய் தாடையை நெருடினார்.

இன்னும் மூணு நாள்ல கல்யாணம் நடக்கப் போகுது. இதுமாதிரி நேரத்துல இப்படியொரு போன் கால் வந்திருப்பது பயமா இருக்கு டாடி!"

"இதோ பாரும்மா உங்க இரண்டு பேரோட ஜோடி பொருத்தம் அமோகமாக இருப்பதை பார்த்துட்டு வயிற்றெரிச்சல் புடிச்ச எவளோ இதுமாதிரி பேசியிருக்கலாம் இதை நீ பெரிசா எடுத்துகிட்டு குழப்பிகிட்டிருக்கிறதை விட்டுட்டு கண்டுக்காமல் விட்டுடறதுதான் நல்லது."

"கொஞ்சம் இருங்க டாடி!" என்றாள் ரீதி. அகஸ்டினுக்கு போன் பண்ணினாள்.

"சொல்லு ரீதி" என்றான் அகஸ்டின் மறுமுனையில்.

"என்னுடைய .ப்ரெண்ட் கீதாவிற்கு இன்விடேஷன் வைக்க மறந்துட்டேன். நாம இன்னிக்கு ஈவினிங் போய் வெச்சிட்டு வந்துடலாம்!"

"ஈவ்னிங் நோ சான்ஸஸ். நாளைக்கு பார்த்துக்கலாம்!"

"தன் ஈவினிங் என்னவாம்?"

"ஈவினிங் ஹோட்டல் வுட் மூனில் முக்கியமான பிஸினஸ் மீட்டிங் இருக்கிறது அது முடியறதுக்கு லேட் நைட்டாயடும். ஸாரி ரீதி!" என்றான். ரீதி திகைப்போடு போனை கட் பண்ணினாள்.

"மாப்பிள்ளை என்னம்மா சொல்றார்?"

"ஈவினிங் ஹோட்டல் வுட் மூனில் மீட்டிங்காம். இன்னும் கொஞ்ச நேரத்துல கிளம்பிடுவாராம். வர்றதுக்கு லேட் நைட்டாயிடுமாம். அப்போ அந்த பொண்ணு சொன்னது அத்தனையும் உண்மைதானே டாடி!"

"அவர் ஹோட்டல் வுட் மூனிற்கு போற விஷயம் யாருக்கோ தெரிஞ்சிருக்கு. நல்லா கண்ணு, காது, மூக்கு வெச்சு ஜோடனையா ஒரு

கதையை உன்கிட்டே சொல்லியிருக்காங்க. நீயும் அதை நம்பிகிட்டு குழம்பி போயிருக்கே. பல வருடங்களாக நீயும் அகஸ்டினும் காதலிச்சுகிட்டிருக்கீங்க. அவர்மேல உனக்கு நம்பிக்கை இல்லையா?" ரீதியின் நெஞ்சு படபடவென்று அடித்தது. அகஸ்டின் பிற பெண்களை நாடுபவனாக இருக்கக்கூடாது என்ற அச்சம் மனதை அழுத்தியது. ராகுல்வர்மா நிமிர்ந்து அவள் முகத்தைப் பார்த்தார். ரீதி கண்களில் நீரின் பளபளப்போடு நின்று கொண்டிருந்தாள்.

"சரிம்மா, நான் ஒண்ணு பண்றேன். நானும் ஹோட்டல் வுட் மூனிற்கு கிளம்பி போறேன். மாப்பிள்ளைக்கு தெரியாமல் அவர் அங்கே எதற்காக போயிருககிறார்ங்கிற காரணத்தை கண்டுபிடிச்சிட்டு வர்றேன்!" என்று எழுந்தார். அவர் சொன்னதை கேட்டு ரீதிக்கு கொஞ்சம் ஆசுவாசம் கிடைத்துது.

16

கலெக்டர் அனிஷா கண்ணாடி முன்னாடி நின்று கூந்தலை வாரிவிட்டு கொண்டாள். மொத்த கூந்தலையும் அள்ளி தூக்கி ஒரு குதிரைவால் போட்டுக் கொண்டாள். அணிந்திருந்த சிவப்பு நிற ஷிபான் சாரியை சரிசெய்து கொண்டாள். அந்நேரம் அவளோட செல்போன் சிணுங்கியது. எடுத்து 'ஹலோ' என்றாள்.

அவளுடைய பி.ஏ. பேசினான். "மேடம் இன்னிக்கு ஈவினிங் ஐந்து மணிக்கு பாத்திமா ஸ்கூலில் படிக்கும் மாணவ-மாணவிகளுக்கு நீங்கள் இனிப்பு வழங்கும் விழா இருக்கிறது!"

"ஞாபகமிருக்கிறது சிவா. கிளம்பிகிட்டிருக்கேன். பாத்திமா ஸ்கூல் எங்கே இருக்கிறது?"

"ஸ்டார் ஹோட்டல் வுட் மூனிற்கு எதிரில் மேடம்!"

அனிஷா மெல்ல நிமிர்ந்தாள். உதட்டோரத்தில் புன்னகைத்துக் கொண்டாள். அகஸ்டின் ஹோட்டல் வுட் மூனிற்கு பி.எம்.டபிள்யூ காரில் வந்தடைந்தபோது மணி நாலரை அவன் காரில் இருந்து இறங்கின அடுத்த நொடி அவனுடைய செல்போன் சிணுங்கியது. அவள்தான் பேசினாள்.

"என்னப்பா எங்கே இருக்கே. நான் நாலு மணியிலிருந்து உனக்காக காத்துகிட்டிருக்கேன்!"

"ஸாரி டியர். டிராப்பிக்கில் மாட்டிக்கிட்டேன். இப்பதான்

வந்தேன். எந்த அறையில் இருக்கே?"

"104!"

"அறையின் எண்ணை மீண்டும் ஒருமுறை கேட்டுக் கொண்டான். அழகான மாடிப் படிகளில் ஏறினான். கீழ்தளத்தில் சாப்பிடும் இடமும் மேல்தளத்தில் அறைகளும் இருந்தது. பெரும்பாலான மேஜைகள் வெறிச்சோடி கிடந்தன. இரண்டு மூன்று மேஜைகளில்தான் ஆட்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். மேலே நீளமான வரண்டாவின் இருபுறமும் வரிசையாய் அறைகள். அனைத்து அறைகளின் எண்களும் ஐந்நூறிலிருந்துதான் ஆரம்பித்திருந்தன. போனில் அவனிடம் கேட்டான். "நீ சொன்ன அறை எண் இங்கில்லையே!"

"நல்லா பாரு. இடது பக்கம் திரும்பினால் கடைசி அறை!" அவன் இடதுபக்கம் திரும்பி கடைசியாக இருந்த அறையை நோக்கி போனான். அறையை நெருங்க நெருங்க அவள் யார்? எப்படி இருப்பாள் என்று பார்க்கம் ஆர்வம் அதிகரித்தது. அறையின் கதவு மூடி இருந்தது. அவன் 'கதவை திற' என்றான்.

"கதவை திறந்து கொண்டு உள்ளே வாடா" என்றாள் அவள்.என்ன மரியாதை குறையுது என்று மனதில் நினைத்துக் கொண்டு கதவைத் தள்ளிக் கொண்டு தாபத்துடன் உள்ளே சென்றான். அந்த அறையை கண்டனதும் அவனது முகம் வெளுத்துப் போனது. அது டாய்லெட். மறுமுனையில் அவள் கடகடவென கேலியாய் சிரித்தாள்.

"ஏய் என்னது இது? டாய்லெட்டில் கொண்டு வந்து விட்டிருக்கே!"

"நீ இருக்க வேண்டிய இடம் அதுதானடா!"

"ப்ளீஸ் டீ சீரியஸ். நீ யாரென்று பார்ப்பதற்காக ஆசையாக வந்திருக்கேன். எங்கே இருக்கேனு சொல்லு!"

"டாய்லெட்டுக்குள்ளே கையை விடு. நான் யாரென்பதை சொல்கிறேன்!" அகஸ்டின் கண்களும் காதுகளும் கோபத்தால் சிவந்தன.

"யு பாஸ்ட்ரட்! எவ்வளவு பெரிய பிஸினஸ்மேன் நான். சின்னக் கழுதை நீ என்னையே கேவலப்படுத்தறீயா. இந்த ஹோட்டலில் தானே இருக்கே. இன்னும் பத்து நிமிஷத்துல உன்னை கண்டுபிடிச்சு தோலை உறிக்கறேன்!"

"நீ பிஸினஸ்மேன் கிடையாது. ஒண்ணா நம்பர் பொம்பளை பொறுக்கி!"

அவள் இணைப்பை துண்டித்தாள். அகஸ்டினுக்கு இப்போ நூறு டிகிரிக்கு கோபம் ஏறியது. பொட்டாச்சி உனக்கே இவ்வளவு திமிறுன்னா ஒரு ஆம்பிள்ளை எனக்கு எவ்வளவு இருக்கும். இந்த ஹோட்டலில்தானே இருக்கே. இங்கிருந்து வெளியேறுவதற்குள் உன்னை கண்டுபிடிச்சு சங்கறுக்கிறேன். மனதில் வெறியோடு அவளை தேட துவங்கினான்.

17

பா.்.த்திமா பள்ளியின் முன்பு அந்த கார் வந்து நின்றது. அந்த காரின் பின்னாடி வந்து நின்ற அம்பாஸிடர் காரின் கதவை போலீஸ் திறந்துவிட கலெக்டர் அனிஷா காரிலிருந்து இறங்கினாள்.

ஹோட்டல் வுட் மூன் முழுவதும் அலலசிவிட்டு வெளியே வந்தான் அகஸ்டின். தன்னை யார் இந்தளவிற்கு அவமானப்படுத்தியது என்று நாலாபக்கமும் பார்வையை வீசி கூர்மையாக தேடினான். பா.்.த்திமா பள்ளியின் முப்பு காரிலிருந்து இறங்கின அனிஷா அவன் கண்ணில் பட்டாள். அவள் அணிந்திருந்த சிவப்பு நிற ஷிபான் சாரி அது அவள்தான் என்று அவனது மூளையை உசுப்பேற்றியது. அவளை கூர்ந்து பார்த்தான்.

அடுத்த ஐந்தாவது நொடி அவளை அடையாளம் கண்டு கொண்டான். கல்லூரியில் படித்தபோது என்னிடம் ஏமாந்த அனிஷா. பழசை இன்னும் மறக்காமல் இப்ப என்னை பழிவாங்க வந்திருக்கியா. இருடி, உன்னை என்ன பண்றேன் பார் என்று மனதில் கோபத்தோடு ரோட்டை கிராஸ் பண்ணி பாத்திமா பள்ளியை நோக்கி சென்றான்.

புன்னகையோடு பள்ளிக்குள் நுழைந்தாள் அனிஷா. அவளுடைய புடவை முந்தானையை பற்றி ஆக்ரோஷமாக இழுத்தான் அகஸ்டின். தன்னுடைய புடவையை அந்த பள்ளியில் படிக்கும் ஸ்டூடண்ட்தான் தவறுதலாக இழுத்து விட்டார்களோ என்று நினைத்து திரும்பி பார்த்தாள். ஆறடி உயரத்தில் ஒரு வாலிபன் தன் புடவை முந்தானையை பற்றி இழுத்ததைக் கண்டு அதிர்ந்து போனாள். கோபம் கண்களில் மிளர கையை அவனை நோக்கி உயர்த்தி

'அரஸ்ட் ஹிம்' என்றாள். அவளுக்கு காவலுக்காக வந்த போலீஸ் அவனைச் சுற்றி வளைத்து கைது பண்ணி ஜீப்பில் ஏற்றினார்கள். டிராப்பிக்கில் மாட்டிக் கொண்டதால் சற்று தாமதமாக ஹோட்டல் வுட் மூனிற்கு வந்த ராகுல் வர்மா எதிர்திசையில் ஒரே

களேபரமாக இருந்ததால் அவரது கவனம் அந்த பக்கம் திசை திரும்பியது. என்னவென்று போய் பார்க்க மனம் துடித்தது. காரிலிருந்து இறங்கி சாலையை கடந்து அங்கே போனார். போலீஸ் ஜீப்பை கடந்து அங்கே அமர்ந்திருப்பதை கண்டு திடுக்கிட்டு போனார்.

"மாப்பிள்ளை என்ன இது? எதற்காக உங்களை கைது பண்ணியிருக்காங்க?" பதற்றத்தோடு கேட்டார்.

அகஸ்டின் தலையை குனிந்தபடி ஒன்றும் பேசாமல் அமர்ந்திருந்தான். போலீஸ் ஜீப் புறப்பட ஆயத்தமானது.

போலீஸாரிடம் ராகுல்வர்மா கேட்டார்.

"எதற்காக என்னோட மாப்பிள்ளையை கைது பண்ணி கூட்டிட்டுப் போறீங்க?"

"கலெக்டரோட புடவை முந்தானையை புடிச்சி இழுத்துட்டார்." புழுதியை கிளப்பிக் கொண்டு போன போலீஸ் ஜீப்பையே கலக்கமாக பார்த்தார் ராகுல் வர்மா.

18

'மாவட்ட கலெக்டர் அனிஷாவின் புடவை முந்தானையை பிடித்து இழுத்ததால் தொழிலதிபர் அகஸ்டின் கைது செய்யப்பட்டார். இந்த செயல் ஈவ் டீஸிங் என்பதால் ஒரு வருட காலம் அவரை சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார்' என்று வெளியாகியிருந்த பரபரப்பான செய்தியை பேப்பரில் படித்துக் கொண்டிருந்தாள் அனிஷா. அப்பொழுதுதான் அகஸ்டினின் போட்டோவின் மீது அவளது பார்வை விழுந்தது. முகம் மாறி உடம்பில் ஒரு அதிர்வலை உண்டானது.

'அ... அகஸ்டின்' என்று அவள் உதடுகள் முணுமுணுத்தன.

இ... இவன் அகஸ்டினாச்சே. இவனா என் புடவை முந்தானையை பிடித்து இழுத்தான். இவனையா நான் கைது செய்ய சொன்னேன். வேகவேகமாக செல்போனை எடுத்து ஆராதனாவின் நம்பருக்கு போன் பண்ணினாள். மறுமுனையில் தூக்க கலக்கத்தில் 'ஹலோ' என்றாள் ஆராதனா.

"தொந்தரவுக்கு மன்னிக்கணும்!" என்றாள் அனிஷா.

"ஏய் இப்போ நான் அங்கே வந்தேன்னா உதை வாங்குவே. தொந்தரவெல்லாம் இல்லை. சொல்லு, எப்படி இருக்கே?"

"ஒரு சுவாரஸியமான சம்பவம் நேத்து நடந்தது!"

"என்னது?"

"அகஸ்டினை நான் நேத்து கைது பண்ணினேன்!"

தூக்கம் கலைந்து ஆர்வத்துடன் கேட்டாள்.

"எப்படி அனிஷா?"

"நேத்து பா.ஃத்திமா ஸ்கூலில் ஸ்டூடண்ட்ஸுக்கு இனிப்பு வழங்குவதற்காக என்னை அழைச்சிருந்தாங்க. நான் பள்ளிக்குப் போகும்போது யாரோ என் புடவை முந்தானையை பிடிச்சு இழுத்தாங்க. அதிர்ச்சியுடன் திரும்பி பார்த்தேன். வாட்டசாட்டமாக ஒரு வாலிபன் நின்று கொண்டிருந்தான். அவனை உடனே கைது செய்யும்படி உத்தரவு பிறப்பித்தேன். நான் கைது பண்ணின ஆள் அகஸ்டின் என்பது இப்போதான் அவனுடைய போட்டோவை பேப்பரில் பார்த்து தெரிந்து கொண்டேன். ஆச்சரியமாக இருக்கிறது ஆராதனா.

இத்தனை வருடங்கள் கழித்து என்னை அடையாளம் கண்டு கொண்டு என் புடவை முந்தானையை ஏன் பிடிச்சு இழுக்க வேண்டும்!"

"உன்னை நேரில் பார்த்தவுடன் நம்ப பழைய ஃப்ரெண்ட் ஓச்சேங்கிற உரிமையிலே புடவை முந்தானையில் கையை வெச்சிருந்திருப்பான். நீ கலெக்டர் என்பது தெரியாமல் எனக்கு இப்ப எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா?"

"இதில் சந்தோஷப்படறதுக்கு என்ன இருக்கிறது?"

"அன்னிக்கு நீ பட்ட அவமானத்தையும், வேதனையையும் இப்போது உன் மூலமாக அவன் அனுபவிக்கிறான். யாராவது மனசுக்குள் புழுங்கினால் அது கேட்கும்னு சொல்லுவாங்க. அவன்மேல் இரக்கப்பட்டு அவனை வெளியே எடுத்துடாதே. நம்ப வெச்சு துரோகம் பண்ணுகிற ஆம்பிள்ளைங்களுக்கு இது மாதிரி தண்டனை தகும்!"

"சரிப்பா டேக் கேர்!" என்று போனை வைத்தாள் அனிஷா.

19

கம்பிகளுக்கு உள்ளே இருந்த அகஸ்டினை வெறுப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள் ரீதி. கையில் வைத்திருந்த நியூஸ் பேப்பரை அவனோட முகத்திற்கு நேராக வீசினாள். பேப்பர் கம்பின் மீது பட்டு கீழே விழுந்தது.

'உங்க லட்சணத்தைப் பற்றி ஒவ்வொரு நியூஸ் பேப்பரிலும் பத்திரிகைகளிலும் போட்டி போட்டுகிட்டு நாறடிச்சுகிட்டிருக்காங்க.

எனக்கு வேற மாத்தி மாத்தி ஆயிரெத்துட்டு போன் கால்ஸ் வேற வந்துகிட்டே இருக்கு-. இது மாதிரி ஆள் உனக்கு கணவனாக வரணுமானு கேட்கறாங்க!"

'ஸாரி ரதீ லைட்டா டிரிங் பண்ணியிருந்தேன். போதையில என்ன பண்றோம்னு தெரியாம ஏதோ தவறுதலா...."

"பொய் சொல்லாதீங்க. எனக்கு முன்னாடியே ஒரு மர்ம கால் ந்தது. ஹோட்டல் வுட்மூனில் ஒரு ராத்திரி முழுவதும் ஒரு பெண்ணுடன் தங்கப் போவதாக ஒரு பெண் சொன்னாள். வழியில கலெக்டர் அனிஷாவை பார்த்திருக்கறீங்க. அவங்க அழகாக இருந்ததால் அவங்க ஒரு கலெக்டர் என்பது தெரியாமல் நடுவீதி என்று கூட பார்க்காமல் அவங்களுடைய புடவை முந்தானையில் கையை வெச்சிருக்கீங்க. இப்ப மாட்டிகிட்டு முழிக்கிறீங்க!"

"ரதீ என்னை கொஞ்சம் பேசவிடு. நடந்தது என்னென்னா...."

"இதுக்கு மேல உங்ககிட்ட பேசுவதற்கு எனக்கு எதுவுமில்லை. இப்படி ஒரு கீழ்தரமான ஆளை கல்யாணம் பண்ணிக்க நான் விரும்பலை. குட் பை!" என்று கூறிவிட்டு விறுவிறுவென போலீஸ் ஸ்டேஷனை விட்டு வெளியேறினாள்.

அகஸ்டின் கோபமாக தரையை வெறித்தான். கோடீஸ்வரனின் மகள் என்பதால்தான் ரீதியை துரத்தி துரத்தி காதலித்தான். பெரியோர்களால் கல்யாணமும் நிச்சயிக்கப்பட்டது. இப்போ எல்லாமே போச்சு.

அனிஷா கலெக்டர் என்பது தெரிஞ்சிருந்தால் அவள் மீது கையே வைத்திருந்திருக்க மாட்டேன். சே, எவ்வளவு பெரிய அவமானம். எவ்வளவு அசிங்கம்! வெளியே போனால் எந்த முகத்தை வெச்சுகிட்டு எல்லோரையும் பார்ப்பது.

அனிஷாதான் பழைய விரோதத்தை மனசில் வெச்சுகிட்டு பழி வாங்குகிறாள்னு நினைச்சேன். ஆனால் அவள் இல்லை. அப்போ யார் அந்த பெண்? என்னுடைய வாழ்க்கையே போச்சே... யார் என்னை தூண்டிவிட்டு வெறுப்பேற்றியது? யார்? யார்? மூளையை போட்டுக் கசக்கினான்.

அந்நேரம் கான்ஸ்டபிள் லத்தியால் ஜெயில் கம்பியை தட்டினார். அகஸ்டின் நிமிர்ந்து பார்த்தான்.

'உன்னை பார்ப்பதற்காக ஒரு பொண்ணு வந்திருக்கு!" என்று கூறிவிட்டு நகர்ந்தார்.

பொண்ணா? யாராக இருக்கும்? அம்மாவும் அப்பாவும் தன்னை வெளியே எடுப்பதற்காக வந்திருக்கிறார்கள் என ஆவலுடன்

கம்பிகளுக்கு வெளியே எட்டிப் பார்த்தான். ப்ளு கலர் ஜீன்சும், பிளாக் கலர் டீ ஷர்ட்டும் அணிந்த ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். கண்களில் அலட்சியபோக்கு தெரிந்தது. உதட்டில் வெற்றி புன்னகை.

"ய.. யார் நீங்க?" என்று அவளை பார்த்து அகஸ்டின் கேட்டான்.

"என்னை தெரியலை. அதுக்குள்ளே மறந்து போயிட்டியா?" உதட்டை அதிகம் அசைக்காமல் கேட்டாள்.

அகஸ்டின் அவளை உற்று பார்த்தான். இருக்கிற ஆயிரதெட்டு பிரச்சினையில் அவள் யார் என்பதை அவனால் அடையாளம் காண முடியவில்லை.

"யார் நீங்க?" என்று மறுபடியும் கேட்டான்.

"என்னை கவருவதற்காக ரேகா நீ ரொம்ப அழகாயிருக்கேனு சொன்னே... என்னை எப்படியாவது அடைய வேண்டும் என்பதற்காக ரேகா நான் உன்னை விட்டுப் போகமாட்டேனு சத்தியம் பண்ணினே. உன் காரியம் முடிந்து என்னை கைகழுவின பிறகு என்னுடைய பெயர், நான் யார் எல்லாம் மறந்து போச்சோ?" என்று நக்கலாக கேட்டாள்.

அகஸ்டின் புருவத்தை சுருக்கி அவளுடைய பெயரை உச்சரித்தான்.

'ரேகா!"

இப்போ அவள் யாரென்பது நினைவிற்கு வந்தது. எம்.பி.ஏ., படிக்கும்போது உடன் படித்த மாணவிதான் இந்த ரேகா. அவள் எதற்காக இப்போது தன்னை சந்திக்க வந்திருக்கிறாள் என்று யோசனையுடன் அவளையே பார்த்தான்.

"நான் எதற்காக உன்னை பார்க்க வந்திருக்கேனு நினைக்கறீயா? கலெக்டர் மேல கை வெச்சதால் உன்னை ஜெயிலில் புடிச்சி போட்டுடாங்கன்னு கேள்விபட்டதும் சந்தோஷப்பட்ட முதல் ஆள் நான்தான்.

உனக்கு போன் பண்ணி ஸ்பென்சர் ப்ளாசாவில் இருக்கும் லேண்ட் மார்க்கிற்கும், ஹோட்டல் வுட் மூனிற்கு வரச்சொல்லி அலைக்கழிச்சது நான்தான்!"

அதிர்ச்சியுடன் அவளை நிமிர்ந்து பார்த்தான்.

"என்னை நம்ப வெச்சு கைவிட்டுட்டு போன உன்னை எப்படியாவது பழிவாங்கணும்னு துடிச்சுகிட்டிருந்தேன்.

அதற்காக மூன்று வருடம் பொறுமையா காத்துகிட்டிருந்தேன். மூணு வருசம் கழிச்சு நான் உன்கிட்டே போனில் பேசினதால் என்னுடைய குரலை உன்னால் கண்டுபிடிக்க முடியலை. புதிதாக ஒரு

ப்ரெண்ட் போனில் பேசினால் அவள் யாரென்று தெரிந்து கொள்ளும் ஆர்வம் எல்லோருக்குமே இருக்கும். உன்மாதிரி ஆளுக்கு அது கொஞ்சம் ஜாஸ்தியாகவே இருந்தது.

அதை பயன்படுத்திகிட்டு இந்த இடத்துக்கு வா, நாளை அந்த இடத்துக்கு வானு சொல்லி என் முகத்தை காண்பிக்காமலே உன்னை நாய்படாத பாடுபடுத்திவிட்டு கடைசியில் வேற நம்பரை மாத்திடலாம்னு நினைச்சு கிட்டிருந்தேன்.

'பட் காட் இஸ் கிரேட்!' நானென்று நினைச்சு கலெக்டர் மேலே கையை வெச்சு இப்ப ஜெயிலுக்குள்ள நின்னு கம்பி எண்ணிகிட்டிருக்கே!"

"இதுக்கெல்லாம் காரணம் நீதானா?

வெளியே வந்ததும் நீன்னை என்ன பண்றேன் பாரு!"

அகஸ்டின் கோபமாக கத்தினான்.

'சும்மா கத்தாதே. ஒரு தொழிலதிபரான உனக்கு வெட்ககேடான செயல். இனிமேல் ஒரு பெண்ணோட நிழலை லகூட நீ ஏமாற்ற நினைக்கக்கூடாது!"

(முற்றும்)

பெண்கள் ரம்யா நாவல்

ரம்யா -1 நாவல் - 9

ஆசிரியர்
ரம்யா

நிர்வாக ஆசிரியர்
முரளி

வரைகலை
அனுபாரதி

அலுவலகம் முகவரி
ரம்யா நாவல்
அனு பப்ளிகேஷன்ஸ்
(140-45/1 நைநார் தெரு,
மயிலாப்பூர், சென்னை-4.
போன்: 99529 89051